# சுராவின்

# சமூக அறிவியல்

## ஆறாம் வகுப்பு

(தமிழ்நாடு அரசின் முப்பருவப் பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது)

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

**சிறப்பம்சங்கள்**

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடப்பகுதியிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினா விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- அலகு தேர்வு வினாத்தாள்கள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு, இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு மற்றும் மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு **(SA) - 2024-25** வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

**For Orders Contact**

**80562 94222 / 81242 01000 / 81243 01000**
**96001 75757 / 98409 26027**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : FY-6-SS-TM

எழுதி வழங்கியவர்
இரா.செல்வராஜ், எம்.ஏ.,

பதிப்பாளர்
திரு.சுபாஷ் ராஜ், B.E., M.S.

**Our Guides for Std. VIII to X**

FULL YEAR GUIDES

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)

**Our Guides for Std. XI & XII**

GUIDES

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**

சுரா பப்ளிகேஷன்ஸ்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

24/04/2025

# பொருளடக்கம்

## முதல் பருவம்


| அலகு | | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வரலாறு என்றால் என்ன? | 1-10 |
| 2. | | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 11-18 |
| 3. | | சிந்துவெளி நாகரிகம் | 19-29 |
| 4. | | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 30-40 |
| 1. | புவியியல் | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 41-50 |
| 2. | | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 51-60 |
| 1. | குடிமையியல் | பன்முகத் தன்மையினை அறிவோம் | 61-67 |
| 2. | | சமத்துவம் பெறுதல் | 68-74 |
| முதல் பருவத் தொகுத்தறி தேர்வு - 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | | | 75-78 |


## இரண்டாம் பருவம்


| அலகு | | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 79-91 |
| 2. | | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 92-102 |
| 3. | | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 103-112 |
| 1. | புவியியல் | வளங்கள் | 113-124 |
| 1. | குடிமையியல் | தேசியச் சின்னங்கள் | 125-132 |
| 2. | | இந்திய அரசியலமைப்புச் சட்டம் | 133-140 |
| 1. | பொருளியல் | பொருளியல் - ஓர் அறிமுகம் | 141-146 |
| இரண்டாம் பருவத் தொகுத்தறி தேர்வு 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | | | 147-150 |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

## மூன்றாம் பருவம்


| அலகு | | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்ககாலம் | 151-161 |
| 2. | | இந்தியா - மௌரியருக்குப் பின்னர் | 162-170 |
| 3. | | பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர் | 171-179 |
| 4. | | தென்னிந்திய அரசுகள் | 180-188 |
| 1. | புவியியல் | ஆசியா மற்றும் ஐரோப்பா | 189-202 |
| 2. | | புவி மாதிரி | 203-211 |
| 3. | | பேரிடரைப் புரிந்து கொள்ளுதல் | 212-216 |
| 1. | குடிமையியல் | மக்களாட்சி | 217-220 |
| 2. | | உள்ளாட்சி அமைப்பு - ஊரகமும் நகர்ப்புறமும் | 221-225 |
| 3. | | சாலை பாதுகாப்பு | 226-230 |
| மூன்றாம் பருவத் தொகுத்தறி மதிப்பீடு (SA) - ஏப்ரல் 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | | | 231-234 |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# பாடத்திட்டம்

| மாதம் | வரலாறு | புவியியல் | குடிமையியல் | பொருளியல் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|---|---|
| ஜூன் | 1 | 1 | 1 | 0 | 3 |
| ஜூலை | 2 | 0 | 2 | 0 | 2 |
| முதல் பருவ இடைத் தேர்வு (ஜூன் & ஜூலை - 5 அலகுகள்) | | | | | |
| ஆகஸ்ட் | 3 | 2 | 0 | 0 | 2 |
| செப்டம்பர் | 4 | 0 | 0 | 0 | 1 |
| முதல் பருவ தொகுத்தறித் தேர்வு (ஜூன் - செப்டம்பர் - 8 அலகுகள்) | | | | | |
| அக்டோபர் | 1 | 1 | 0 | 1 | 3 |
| நவம்பர் | 2 | 0 | 1 | 0 | 2 |
| இரண்டாம் பருவ இடைத் தேர்வு (அக்டோபர் & நவம்பர் - 5 அலகுகள்) | | | | | |
| டிசம்பர் | 3 | 0 | 2 | 0 | 2 |
| இரண்டாம் பருவ தொகுத்தறித் தேர்வு (அக்டோபர் - டிசம்பர் - 7 அலகுகள்) | | | | | |
| ஜனவரி | 1 | 1 | 1 | 0 | 3 |
| பிப்ரவரி | 2, 3 | 2 | 2 | 0 | 4 |
| மூன்றாம் பருவ இடைத் தேர்வு (ஜனவரி & பிப்ரவரி - 7 அலகுகள்) | | | | | |
| மார்ச் | 4 | 3 | 3 | 0 | 3 |
| ஏப்ரல் | மூன்றாம் பருவ தொகுத்தறித் தேர்வு (ஜனவரி - மார்ச் - 10 அலகுகள்) | | | | |





www.surabooks.com

## TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : Padi |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : Asiad Colony |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** |
| Bank Name | : **FEDERAL BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : FDRL0001324 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

# சமூக அறிவியல்

# முதல் பருவம்

www.surabooks.com

## முதல் பருவம்


| அலகு | | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வரலாறு என்றால் என்ன? | 3-10 |
| 2. | | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 11-18 |
| 3. | | சிந்துவெளி நாகரிகம் | 19-29 |
| 4. | | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 30-40 |
| 1. | புவியியல் | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 41-50 |
| 2. | | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 51-60 |
| 1. | குடிமையியல் | பன்முகத் தன்மையினை அறிவோம் | 61-67 |
| 2. | | சமத்துவம் பெறுதல் | 68-74 |


www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# வரலாறு

## அலகு 1 வரலாறு என்றால் என்ன?

### கற்றல் நோக்கங்கள்

- வரலாறு என்றால் என்ன என்று அறிந்துகொள்ளுதல்.
- வரலாற்றின் சிறப்பைப் புரிந்துகொள்ளுதல்.
- வரலாற்றுக்கு முந்தைய கால மனித இனத்தின் வாழ்வியல் முறையைத் தெரிந்துகொள்ளுதல்.
- பாறை ஓவியங்கள் அவர்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துவதை அறிதல்.
- வரலாறு மற்றும் வரலாற்று ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தினைத் தெரிந்துகொள்ளுதல்.



### பயிற்சிகள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி:**

**1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை** ⊗⊗

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

**[விடை : ஆ) வேட்டையாடுதல்]**

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டுக.**

**1. கூற்று : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.**

**காரணம் : குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்தபோது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.**

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.
இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

**[விடை : ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி]**

**2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?**

அ) அருங்காட்சியகங்கள் ஆ) புதை பொருள்படிமங்கள்
இ) கற்கருவிகள் ஈ) எலும்புகள் **[விடை : அ) அருங்காட்சியகங்கள்]**

**3. தவறான இணையைக் கண்டுபிடி:**

அ) பழைய கற்காலம் – (i) கற்கருவிகள்
ஆ) பாறை ஓவியங்கள் – (ii) குகைச் சுவர்கள்
இ) செப்புத் தகடுகள் – (iii) ஒரு வரலாற்று ஆதாரம்
ஈ) பூனைகள் – (iv) முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**[விடை : ஈ) பூனைகள் - (iv) முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு]**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

**4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

**[விடை : இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்]**

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் .................. . **[விடை : குகைகள்]**
2. வரலாற்றின் தந்தை .................. . ※ **[விடை : ஹெரோடோடஸ்]**
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு .................. . **[விடை : நாய்]**
4. கல்வெட்டுகள் .................. ஆதாரங்கள் ஆகும். **[விடை : தொல்பொருள்]**
5. அசோகச் சக்கரத்தில் .................. ஆரக்கால்கள் உள்ளன. **[விடை : 24]**

## IV. சரியா? தவறா?

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன. **[விடை : சரி]**
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. **[விடை : சரி]**
3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது. ※ **[விடை : சரி]**

## V. பொருத்துக: ※

| | | | |
|---|---|---|---|
| அ) | பாறை ஓவியங்கள் | - (i) | செப்பேடுகள் |
| ஆ) | எழுதப்பட்டப் பதிவுகள் | - (ii) | மிகவும் புகழ்பெற்ற அரசர் |
| இ) | அசோகர் | - (iii) | தேவாரம் |
| ஈ) | மதச் சார்புள்ள இலக்கியம் | - (iv) | வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது |

**[விடை . அ) - iv, ஆ) - i, இ) - ii, ஈ) - iii]**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.

**1. நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறு.**

விடை. (i) நடந்து முடிந்த நிகழ்வுகளைக் குறித்து வைத்துக் கொள்ளவும்,

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நம் முன்னோர்கள் பயன்படுத்திய கற்கருவிகளைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைப் பற்றியும் நாட்குறிப்புகளை வைத்துக் கொண்டே நாம் தெரிந்து கொள்ள முடியும்.

**2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்?**

விடை. (i) அக்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கருவிகளிலிருந்தும்

(ii) பாறைகளின் மீது அவர்கள் தீட்டிய ஓவியங்களிலிருந்தும்

(iii) குகைச் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்களிலிருந்தும் அக்கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் அறிந்து கொள்ளலாம்.

**3. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச்சான்றா?**

விடை. ஆம்! கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றே!

**4. வரலாற்று தொடக்கக் காலம் (Proto History) என்றால் என்ன?**

விடை. வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தை வரலாற்று தொடக்கக் காலம் என்று அழைக்கலாம்.

**5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுது.**

**விடை.** இராமாயணம்/ மகாபாரதம்/ மணிமேகலை

## VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

**1. வரலாறு என்றால் என்ன?** ⊗

**விடை.** (i) 'வரலாறு' என்பது கடந்தகால நிகழ்வுகளின் 'காலவரிசைப் பதிவு'.

(ii) வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான 'இஸ்டோரியா' (Istoria) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'விசாரிப்பதன் மூலம் கற்றல்' என்பதாகும்.

**2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.**

**விடை.** (i) வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது மனிதன் முதன் முதலில் கற்கருவிகளைப் பயன்படுத்தியதற்கும், எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலமாகும்.

(ii) கற்கருவிகள், புதை படிவங்கள், பாறை ஓவியங்கள் போன்ற பலவற்றிலிருந்தும் வரலாற்றுத் தரவுகளைப் பெறுகிறோம்.

**3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?**

**விடை.** மலைப்பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் வரையப்பட்ட பாறை ஓவியங்கள், கற்கருவிகள், புதை படிவங்கள், தொல்லியல் அடையாளங்கள் இவை வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி நாம் அறியக்கூடிய சில சான்றுகள் ஆகும்.

**4. வரலாற்றுக்கு முந்தைய காலக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?**

**விடை.** (i) வரலாற்றுக்கு முந்தைய காலகருவிகள் கொண்டபூர், நெவாசா, மேர்காஷ் போன்ற இடங்களிலிருந்தும், பாறை–குகை வசிப்பிடங்களான பிம்பேட்கா மற்றும் எடக்கல் குகைகளிலிருந்தும் காணலாம்.

(ii) தமிழ்நாட்டில், அத்திரம்பாக்கம், அரியலூர், பெரம்பலூர், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்களிலிருந்தும் வரலாற்றுக்கு முந்தைய கால கருவிகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

**5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?** ⊗

**விடை.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த கல் ஆயுதங்கள், பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஈமத் தாழிகள், பழங்குடி மக்களின் வாழ்வியல் பொருட்கள் போன்றவை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) இவற்றின் மூலம் அக்கால மனிதர்களின் வாழ்க்கை முறையை அறிய முடிகிறது.

(iii) குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் வரைந்த ஓவியங்களின் புகைப்படங்கள், இரும்பு, வெண்கலம், தங்கம் போன்றவற்றால் செய்யப்பட்ட சிற்பங்கள் ஆகியவை அக்கால மனிதர்களின் திறமையை அறிந்து கொள்ள உதவுகிறது.

(iv) மாணவர்களுக்குப் பொதுஅறிவுக் களஞ்சியமாக பயன்படுகிறது.

**6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.**

**விடை.** (i) பாறைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கூர்மையான கற்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

(ii) ஒருவகை கற்கருவி – 'கண்ணீர்–துளி' போன்ற வடிவத்தில் அமைந்த மிகக் கூரான ஆயுதம்.

(iii) மற்றொரு வகை 'கற்கருவி'(Burin), உருண்டையான, ரம்பம் போன்ற கூர்மையான நுனிகளை உடையது.

(iv) இவை தவிர, மிருகங்களின் கொம்புகள், எலும்புகள், மரக்கிளைகளாலான கருவிகள் ஆகியனவும் பயன்படுத்தப்பட்டன.

**7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?**

**விடை.** (i) பாறைகளில் ஓவியங்கள் வரையப்பட்டதன் காரணம் எதிர்கால மக்களுக்கு இம்மக்களின் வாழ்க்கை முறைகளை தெரிவிப்பதற்காகவும்,

(ii) அக்கால மக்கள் தம் ஒவ்வொரு செயலையும் ஓவியமாகத் தீட்ட விருப்பம் கொண்டதற்காகவும் இருக்கலாம்.

(iii) பாறைகளில் ஓவியங்கள் தீட்டினால் நெடுங்காலம் அவை அழியாமல் இருக்கும் என நினைத்திருக்கலாம்.



www.surabooks.com

**8. தொல் கைவினைப் பொருள்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

விடை. (i) மண் பொம்மைகள், ஆபரணங்கள், மட்பாண்டங்கள், கற்கருவிகள் இவையாவும் மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும்.

(ii) கற்களாலும், உலோகங்களாலும் மற்றும் மண்ணைக் கொண்டு ஒரு வடிவத்தை ஏற்படுத்தி அதை (தொல்லியல்) கைவினைப் பொருள்களாகவே பயன்படுத்தி வந்தனர்.

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்.

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?** ⊗

விடை. (i) வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்கள் வாழ்ந்த குகையினுள் கொடிய மிருகங்கள் வர வாய்ப்பிருந்தது.

(ii) இதிலிருந்து தப்பிக்க நாயினுடைய மோப்ப சக்தி உதவும் என்பதை மனிதன் அறிந்து கொண்டான்.

(iii) எனவே குகைகளில் விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து, குரைத்தவாறு அவனுக்கு உணர்த்தின.

(iv) ஆகவே, வேட்டையாடுவதற்கும், பாதுகாப்பிற்கும் நாய்கள் பயனுள்ளதாக இருந்தன.

**2. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.**

விடை.

| வ.எண். | பழைய கற்கால மனிதன் | தற்கால மனிதன் |
|---|---|---|
| 1. | நாடோடி வாழ்க்கை. | நகரமோ, அல்லது கிராமமோ ஒரே இடத்தில் வாழ்க்கை. |
| 2. | குகைகளிலும், மரப் பொந்துகளிலும் பாதுகாப்பின்றி வாழ்ந்தனர். | பாதுகாப்பான வீடுகளில் வாழ்கின்றனர். |
| 3. | மரப்பட்டைகள், இலைகள், விலங்கின் தோல் ஆகியவற்றை ஆடையாக அணிந்தனர். | பட்டு, பருத்தி ஆகியவற்றால் நெய்யப்பட்ட துணிமணிகளை அணிகின்றனர். |
| 4. | இயற்கையாகக் கிடைத்த கிழங்கு, காய், கனிகளை உண்டனர். | சிறந்த உணவு வகைகளை சமையல் செய்து உண்ணுகிறார்கள். |
| 5. | ஒவ்வொரு நாளும் போராட்டமான வாழ்க்கை. | நவீன கண்டுபிடிப்புகளால் சொகுசான வாழ்க்கை முறை. |

## IX. மாணவர் செயல்பாடு.

**1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தது?**

அ) ஆதிச்சநல்லூரில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகள்
ஆ) வேள்விக்குடி செப்பேடுகள்
இ) மகாபாரதம்
ஈ) சாஞ்சி ஸ்தூபி
உ) பட்டினப்பாலை
ஊ) கீழடியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள்
எ) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பொம்மைகள்
ஏ) தஞ்சை பெரிய கோவில்

விடை. அ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
ஆ] கல்வெட்டுகள் (தொல் பொருள்கள்)
இ] மதசார்புள்ள இலக்கியம் – இதிகாசங்கள்
ஈ] நினைவுச் சின்னங்கள் (தொல் பொருள்கள்)
உ] இலக்கிய ஆதாரங்கள்
ஊ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
எ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
ஏ] நினைவுச் சின்னங்கள் (தொல் பொருள் ஆதாரங்கள்)




www.surabooks.com

## X. வாழ்க்கைக் கல்வி

**1. களிமண்ணைக் கொண்டு பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் மாதிரிகள் தயார் செய்க.**

**எ.கா. :**











## XI. கட்டக வினாக்கள்


| | | |
|---|---|---|
| **அன்று மனிதர்கள் என் மீது கிறுக்கினார்கள்; வண்ண மை கொண்டு ஓவியம் வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார்?**<br>**விடை :** பாறை | **ஏதேனும் இரு தொல்பொருள் ஆதாரங்களைக் கூறு.**<br>**விடை :**<br>1. தொல் கைத்திறன் பொருட்கள்<br>2. நினைவுச் சின்னங்கள்<br>3. கல்வெட்டுகள் | **இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு.**<br>**விடை :**<br>1. மதசாற்பற்றவை<br>2. மத சார்புள்ளவை |
| **பொ.ஆ.மு - இதன் விரிவாக்கம் என்ன?**<br>**விடை :**<br>பொது ஆண்டிற்கு முன் | **"இஸ்டோரியா" என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள் ?**<br>**விடை :**<br>விசாரிப்பதன் மூலம் கற்றல் | **பொ.ஆ- இதன் விரிவாக்கம் என்ன?**<br>**விடை :**<br>பொது ஆண்டு |
| **எழுத்துப்பொறிப்புகள் பற்றிய படிப்பு ............... .**<br>**விடை :** கல்வெட்டியல் | **நாணயங்கள் பற்றிய படிப்பு .................... .**<br>**விடை :** நாணயவியல் | **நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார்?**<br>**விடை :**<br>வரலாற்று ஆதாரங்கள் |

www.surabooks.com

## XII. வரைபடம்

**1. இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

டெல்லி சென்னை தமிழ்நாடு ஆந்திர பிரதேசம்
கேரளா கர்நாடகா




## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி:**

**1. 'தர்மா' என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள் .......................... .**

அ) பிச்சை ஆ) சிந்தனை
இ) அறநெறி ஈ) கட்டுப்பாடு **[விடை : இ) அறநெறி]**

**2. 'தம்மா' என்பது ஒரு .................... சொல்.**

அ) சமஸ்கிருத ஆ) மண்டாரின்
இ) ஜப்பானிய ஈ) பிராகிருத **[விடை : ஈ) பிராகிருத]**

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.**

**1. கூற்று : கலிங்கப்போருக்குப்பின், பேரரசர் அசோகர் போர் தொடுப்பதை கைவிட்டார்.**
**காரணம் : பல உயிர்கள் போரில் மடிவதைக் கண்டு மனம் வருந்தினார்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு.

**[விடை : ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி]**

**2. கூற்று : பெரிய கோயிலைக் கட்டுவித்தவர் இராஜராஜ சோழர். இக்கூற்றுடன் தொடர்புடையது எது?**

அ) கும்பகோணம்
ஆ) திருச்சி
இ) மதுரை
ஈ) தஞ்சாவூர்

**[விடை : ஈ) தஞ்சாவூர்]**

**3. தவறான இணையைக் கண்டுபிடி:**

அ) அரண்மனை - (i) திருமலை நாயக்கர் மஹால்
ஆ) 24 ஆரக்கால் சக்கரம் - (ii) சாஞ்சி ஸ்தூபி
இ) நாணயவியல் - (iii) நாணயம் சார்ந்த துறை
ஈ) கல்வெட்டியல் - (iv) கல்வெட்டு துறை

**[விடை : ஆ) 24 ஆரக்கால் சக்கரம் - (ii) சாஞ்சி ஸ்தூபி]**

**4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

அ) உலகில் முதன் முதலாக விலங்குகளுக்கு தனி மருத்துவமனை அமைத்துத் தந்தவர் அசோகர்.
ஆ) சாஞ்சி ஸ்தூபி, மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
இ) சாரநாத் தூண் உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.
ஈ) வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் அசோகரின் வரலாறு தொகுக்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டது.

**[விடை : ஈ) வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் அசோகரின் வரலாறு தொகுக்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டது]**

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. 'இஸ்டேரியா' என்பது ................. மொழியின் சொல். **[விடை : கிரேக்க]**
2. திருவாசகம் என்பது .................. இலக்கியங்களில் ஒன்று **[விடை : பக்தி]**

**IV. சரியா? தவறா?**

1. அசோகர் குறித்த தகவல்கள் வரலாற்றின் பக்கங்களில் 19ஆம் நூற்றாண்டு வரை இடம் பெறவே இல்லை. **[விடை : சரி]**
2. நாட்டுப்புற கதைப்பாடல்கள், மதசார்பற்ற இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. **[விடை : தவறு]**
3. பழங்கால மனிதர்கள் வேட்டையாடப் போகும்போது பாதுகாப்பிற்காக நாய்களை உடன் அழைத்துச் சென்றனர். **[விடை : சரி]**

**V. பொருத்துக:**

அ) பக்தி இலக்கியம் - (i) சாஞ்சி
ஆ) இதிகாசம் - (ii) இராமாயணம்
இ) மடங்கள் - (iii) தேவாரம்
ஈ) ஸ்தூபி - (iv) டபாங்

**[விடை . அ) - iii, ஆ) - ii, இ) - iv, ஈ) - i]**

**VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.**

**1. மூன்று பக்தி இலக்கியங்களின் பெயர்களைக் கூறு.**

விடை. **(i)** தேவாரம் **(ii)** நாலாயிர திவ்ய பிரபந்தம் **(iii)** திருவாசகம்

**2. சாரநாத் கற்றூணின் முக்கியத்துவம் என்ன?**

விடை. நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள இலச்சினை ஆகும்.

**3. மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்குக் கொண்டுவந்தவர்கள் யாவர்?**

விடை. ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களான வில்லியம் ஜோன்ஸ், ஜேம்ஸ் பிரின்செப், அலெக்ஸாண்டர் கன்னிங்காம் போன்றவர்கள் வரலாற்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள் தான் மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்குக் கொண்டுவந்தன.



www.surabooks.com

# அலகுத் தேர்வு

நேரம்: 40 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** **(2 × 1 = 2)**

**1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை.**

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்

இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

**2. 'தம்மா' என்பது ஒரு .................... சொல்.**

அ) சமஸ்கிருத ஆ) மண்டாரின் இ) ஜப்பானிய ஈ) பிராகிருத

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக :** **(1 × 1 = 1)**

1. **கூற்று :** பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

**காரணம் :** குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.

இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக :** **(3 × 1 = 3)**

1. வரலாற்றின் தந்தை .......................... .
2. அசோகச் சக்கரத்தில் .......................... ஆரக்கால்கள் உள்ளன.
3. 'இஸ்டோரியா' என்பது .......................... மொழியின் சொல்.

**IV. சரியா? தவறா?** **(2 × 1 = 2)**

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.
2. அசோகர் குறித்த தகவல்கள் வரலாற்றின் பக்கங்களில் 19ஆம் நூற்றாண்டு வரை இடம் பெறவே இல்லை.

**V. பொருத்துக :** **(4× 1 = 4)**

அ) அசோகர் - (i) டபாங்

ஆ) எழுதப்பட்டப் பதிவுகள் - (ii) சாஞ்சி

இ) மடங்கள் - (iii) செப்பேடுகள்

ஈ) ஸ்தூபி - (iv) மிகவும் புகழ்பெற்ற அரசர்

**VI. சுருக்கமான விடை தருக.** **(4 × 2 = 8)**

1. வரலாறு என்றால் என்ன?
2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.
3. மூன்று பக்தி இலக்கியங்களின் பெயர்களைக் கூறு.
4. சாரநாத் கற்றூணின் முக்கியத்துவம் என்ன?

**VII. விரிவான விடை தருக :** **(1 × 5 = 5)**

1. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?

## விடைகள்

I. 1. ஆ) வேட்டையாடுதல் 2. ஈ) பிராகிருத

II. 1. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

III. 1. ஹெரோடோடஸ் 2. 24 3. கிரேக்க

IV. 1. சரி 2. சரி

V. அ) - iv, ஆ) - iii, இ) - i, ஈ) - ii

VI. 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 1 2. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 2

3. பார்க்க பாடப்புத்தக வினா எண் VI - 1 4. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 2


VII. 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 5.

◈◈◈

# அலகு 2 மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

## கற்றல் நோக்கங்கள்

- மனிதகுலம் உருவான வரலாற்றை அறிந்து கொள்ளல்.
- வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் நிலையிலிருந்து ஓரிடத்தில் நிலைத்து வாழ்தல் வரையிலான மனிதப் பரிணாமத்தின் வெவ்வேறு கட்டங்களைப் பயில்வது.
- வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் கற்கருவிகளைப் பற்றி அறிந்து கொள்ளல்.
- நெருப்பு மற்றும் சக்கரத்தின் பயன்பாட்டைப் புரிந்து கொள்ளல்.
- பழங்கால மனிதர்களின் குகை ஓவியங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளல்.



## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**1. பரிணாமத்தின் வழிமுறை .................. .**

அ) நேரடியானது ஆ) மறைமுகமானது

இ) படிப்படியானது ஈ) விரைவானது **[விடை : இ) படிப்படியானது]**

**2. தான்சானியா .................. கண்டத்தில் உள்ளது.**

அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா

இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா **[விடை : ஆ) ஆப்பிரிக்கா]**

**II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.**

**காரணம் : தட்பவெப்ப நிலை மாற்றமே.**

அ) கூற்று சரி ஆ) காரணம் தவறு

இ) கூற்றும் காரணமும் சரி. ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**[விடை : இ) கூற்றும் காரணமும் சரி]**

**III. சரியான இணையைக் கண்டுபிடி.**

அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் – (i) இரு கால்களால் நடப்பது

ஆ) ஹோமோ ஹேபிலிஸ் – (ii) நிமிர்ந்து நின்ற மனிதன்

இ) ஹோமோ எரக்டஸ் – (iii) சிந்திக்கும் மனிதன்

ஈ) ஹோமோ சேப்பியன்ஸ் – (iv) முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது

**[விடை: அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் - (i) இரு கால்களால் நடப்பது]**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**IV. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை .................. உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள். **[விடை : மானுடவியல் ஆய்வாளர்கள்]**
2. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் .................. வாழ்க்கை வாழ்ந்தார்கள். **[விடை : நாடோடி]**
3. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் .................. மற்றும் .................. ஆகும். **[விடை : வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல்]**
4. .................. கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியது. ※ **[விடை : கலப்பை]**
5. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள .................. என்னுமிடத்தில் காணப்படுகின்றன. **[விடை : கரிக்கையூர்]**

**V. சரியா? தவறா?**

1. நாணயங்கள் பற்றிய படிப்பு மானுடவியல் ஆகும். ※ **[விடை : தவறு]**
2. ஹோமோ எரக்டஸ் மனிதர்களுக்கு நெருப்பு குறித்த அறிவு இருந்தது. **[விடை : சரி]**
3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும். **[விடை : சரி]**
4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு. ※ **[விடை : தவறு]**

**VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களின் காலத்தை அறிய என்ன முறை பயன்படுகிறது?**

விடை. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களின் காலத்தை அறிய, கதிரியக்கக் கார்பன் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டது.

**2. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?**

விடை. தொடக்க கால மனிதர்கள் பதப்படுத்தப்பட்ட விலங்குகளின் தோல்கள், மரங்களின் கிளைகள், இலைகள் ஆகியவற்றை அணிந்தார்கள்.

**3. தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?**

விடை. தொடக்க கால மனிதர்கள் குழுக்களாக மரம், குகை அல்லது மலையடிவாரத்தில் வாழ்ந்தார்கள்.

**4. நிலத்தை உழுவதற்கு எந்த விலங்கு பயன்படுத்தப்பட்டது?** ※

விடை. நிலத்தை உழுவதற்கு எருதுகள் பயன்படுத்தப்பட்டன.

**5. மனிதர்கள் எப்போது ஒரே இடத்தில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள்?**

விடை. (i) மனிதர்கள் தங்கள் அனுபவத்தால் ஆற்றுக்கு அருகில் உள்ள நிலம் விவசாயத்துக்கும் கால்நடை வளர்ப்புக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப் புரிந்துகொண்டார்கள்.

(ii) எனவே அவர்கள் ஆற்றங்கரைகளிலேயே நிலையாகத் தங்க முடிவெடுத்தார்கள்.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

**1. பரிணாமம் என்றால் என்ன?**

விடை. மனித இனம் மாறுதல் அடைந்து, ஒரு மேம்பட்ட கட்டத்தை நோக்கி வளர்ச்சி அடைவதே பரிணாமம் ஆகும்.

**2. ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் இரு பண்புகளை எழுது.**

விடை. (i) ஹோமோ சேப்பியன்ஸ் சுயமாக சிந்திப்பவராக இருந்தனர்.

(ii) கரடு முரடான கருவிகளைப் பயன்படுத்தினர்.

(iii) வேட்டையாடுகிற மற்றும் உணவு சேகரிக்கிற சமூகமாக வாழ்ந்தனர்.

**3. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள்?** ※

விடை. (i) ஓரிடத்தில் உணவுப் பொருட்கள் கிடைப்பது நின்றுவிட்டால், அவர்கள் வேறொரு இடத்திற்குச் சென்றார்கள்.

(ii) விவசாய நிலத்தில் மண்வளம் குன்றிவிட்டால், அவர்கள் வேறு ஒரு பகுதிக்கு இடம்பெயர்ந்தார்கள்.

www.surabooks.com

**4. பழங்கால வேட்டை முறைகளை விளக்கிக் கூறவும்.**

விடை. (i) உணவைத் தேடி நகர்ந்துகொண்டே இருந்தார்கள். பன்றி, மான், காட்டெருமை, காண்டாமிருகம், யானை, கரடி போன்ற விலங்குகளை வேட்டையாடினார்கள்.

(ii) குழுவாகச் சென்று வேட்டையாட ஆரம்பித்தனர். குழி தோண்டி, அதில் விலங்குகளைச் சிக்க வைத்து வேட்டையாடினர்.

(iii) கல், எலும்பு, மற்றும் மரக்கிளைகளாலான கூர்மையான கருவிகளை பயன்படுத்தினர்.

**5. கோடரிகள் ஏன் உருவாக்கப்பட்டன?**

விடை. கோடரிகளை மரம் வெட்டவும், மரக்கிளைகளை நீக்கவும், குழிதோண்டவும், விலங்குகளை வேட்டையாடவும், விலங்குகளின் தோலை உரிக்கவும் பயன்படுத்தினார்கள்.

**6. தொல்லியல் என்பதை எவ்வாறு வரையறுப்பாய்?**

விடை. (i) வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றிப் படிப்பது தொல்லியல் ஆகும்.

(ii) தொல்லியல் ஆய்விற்கு முக்கிய ஆதாரமாக அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் உதவுகின்றன.

**7. மானுடவியல் பற்றி நீ அறிந்துள்ளது என்ன?** ※

விடை. (i) மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி படிப்பது மானுடவியல் ஆகும்

(ii) மானுடவியல் (anthropology) என்னும் சொல் இரண்டு கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. anthropos என்பதன் பொருள் மனிதன்.

(iii) logos என்பதன் பொருள் எண்ணங்கள் அல்லது காரணம்.

## VIII. உயர் சிந்தனை வினா.

**1. பழங்காலம் முதல் நவீன காலம் வரை சக்கரம் வகித்து வரும் முக்கியத்துவம்.** ※

விடை. (i) ஆதிகால 'ஹோமோ சேப்பியன்ஸ்' மக்கள், உருளை வடிவ பொருட்கள் எளிதில் இயங்கக் கூடியனவாக இருந்ததை உணர்ந்து கொண்டனர்.

(ii) அவர்களின் வம்சாவளியினர், இந்த உருளையின் உருண்டோடும் கலையைப் பயன்படுத்தி, உருளை வடிவ கட்டைகளின் மூலம் பெரிய பொருட்களை இடம் விட்டு இடம் நகர்த்திச் சென்றனர்.

(iii) இந்த உருளையும், அச்சும் சேர்ந்த கண்டுபிடிப்பு, உருளும் ஒரு கட்டை ஒரு துளையில் பொருத்தப்பட்டு புதியதொரு வண்டியை உருவாக்க ஏதுவாக அமைந்தது.


(iv) பின்னர் ஆரங்கள் அமைக்கப்பட்ட சக்கரத் தேர்கள், இந்த வண்டிகளை விட அதி விரைவாக பயணப்பட்டதால், 'தேர் பந்தயம்' போன்றவைகள் கூட பின்னாளில் பழக்கப்பட்டவையாயின.

(v) ஆனால் தற்போதைய கண்டுபிடிப்பான காற்றடைக்கப்பட்ட இரப்பரினாலான உருளை வடிவங்கள் சக்கரங்களை, உறுதியானதாகவும், வெகுவேகமாக சுழலக் கூடியனவாகவும், வலிமையானதாகவும் மாற்றிவிட்டன.

## IX. மாணவர் செயல்பாடு.

**1. வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த மனிதர்களின் படங்கள் அடங்கிய ஒரு படத்தொகுப்பைத் தயார் செய்க.**

மாதிரி :



www.surabooks.com



## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| **.................. கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு பானை செய்வதை எளிதாக்கியது.**<br><br>**விடை :**<br>சக்கரம் | **பண்டப்பரிமாற்ற முறை என்பது .................. ஆகும்.**<br><br>**விடை :**<br>தேவையைவிட அதிகமாக உள்ள பொருட்களை கொடுத்து, அதற்கு பதிலாக வேறு பொருட்களைப் பெறுதல். | **தொடக்க கால மனிதர்கள் வேட்டைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களில் இரண்டைக் கூறு.**<br><br>**விடை :**<br>1. கூர்மையான கற்கள்<br>2. கோடாரி |
| **ஆயுதங்கள் செய்வதற்கு ஏற்ற கல் எது?**<br><br>**விடை :** சிக்கி-முக்கி கல் | **நகரங்களும் பெரு நகரங்களும் ............ மற்றும் ............... ஆகியவற்றால் தோன்றின.**<br><br>**விடை :** வணிகம், வர்த்தகம் | **மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எது?**<br><br>**விடை :** சக்கரம் |
| **பாறை ஓவியங்களில் உள்ள உருவங்களை அடையாளம் காணவும்.**<br><br>**விடை :**<br>1. விலங்குகளை வேட்டையாடுதல்<br><br>2. நடமாடுதல்<br> | **தொடக்க கால மனிதர்களின் முதன்மையான தொழில் எது?**<br><br>**விடை :** வேட்டையாடுதல் | **குகை ஓவியங்கள் மூலம் நாம் என்ன அறிந்துகொள்கிறோம்?**<br><br>**விடை :**<br>அவர்களது தினசரி வாழ்க்கைமுறை, நிகழ்வுகள் |
| **தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?**<br><br>**விடை :**<br>குகைகளிலும், மலைகளிலும், மலைஅடிவாரத்திலும் | **.................. தொல்லியல் துறையுடன் தொடர்புடையது.**<br><br>**விடை :**<br>அகழ்வாராய்ச்சி | **தொடக்க கால மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளில் இரண்டைக் குறிப்பிடு.**<br><br>**விடை :**<br>எருது, நாய். |

www.surabooks.com


www.surabooks.com



## XII. வரைபடம்

**1. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.** ※

1. ஆதிச்சநல்லூர் 2. அத்திரம்பாக்கம் 3. பிம்பேட்கா
4. ஹன்சாகி பள்ளத்தாக்கு 5. லோத்தல்




## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**1. தாடை நீட்சி சற்று குறைந்தும், பெரிய கால் விரல்களுடனும் காணப்பட்ட மனிதர்கள் ................. .**

அ) ஹோமோ எரக்டஸ் ஆ) ஹோமோ ஹெபிலிஸ்
இ) நியாண்டர் தால் ஈ) ஹோமோ சேப்பியன்ஸ்

**[விடை : ஆ) ஹோமோ ஹெபிலிஸ்]**

**II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : குரோமேக்னான்ஸ் மனிதர்கள் ஆப்பிரிக்காவில் உள்ள குகைகளில் வாழ்ந்தார்கள்.**
**காரணம் : ஆப்பிரிக்காவில் வன விலங்குகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டன.**

அ) கூற்று சரி
ஆ) காரணம் தவறு
இ) கூற்றும் காரணமும் சரி.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **[விடை : ஈ) கூற்றும் காரணமும் தவறானவை]**

**III. சரியான இணையைக் கண்டுபிடி.**

அ) நியாண்டர்தால் - (i) ஐரோப்பா மற்றும் ஆசியா (யூரோசியா)
ஆ) குரோ மக்னான்ஸ் - (ii) பிரான்ஸ்
இ) ஹோமோ எரக்டஸ் - (iii) சீனா
ஈ) ஹோமோ ஹெபிலிஸ் - (iv) தென் ஆப்பிரிக்கா

**[விடை : இ) ஹோமோ எரக்டஸ் - (iii) சீனா]**

**IV. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. பீகிங் மனிதனின் வாழ்விடம் .................... ஆகும். ※ **[விடை : சீனா]**
2. குரோ மேக்னான்ஸ் மனிதர்களிடம் ................ பழக்கம் இருந்தது. **[விடை : இறந்தவர்களைப் புதைக்கும்]**
3. தொல்லியல் மற்றும் மானுடவியல் மூலமாக மனிதர்கள் ............... அடைந்த கதையை நாம் பயில முடியும். **[விடை : பரிணாம வளர்ச்சி]**
4. .................... ஆண்டுகளுக்கு முன் வேளாண்மை தொடங்கியது. **[விடை : 8,000]**
5. ஆயுதங்கள் செய்ய ....................... கல் மிகவும் ஏற்றதாக இருந்தது. **[விடை : சிக்கி முக்கி]**

**V. சரியா? தவறா?**

1. பொ.ஆ.1850-இல் மாடுகள் அல்லது கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட வண்டிகளைச் சாலையில் காண முடிந்தது. **[விடை : சரி]**
2. ஹோமோ எரக்டஸ் நேராக நிமிர்ந்த மனிதனாக இருந்தான். **[விடை : சரி]**
3. சுயமாக சிந்திக்கும் மனிதனாக நியாண்டர்தால் மனிதன் இருந்தான். **[விடை : தவறு]**
4. பிம்பேட்கா - பாறை வாழிடங்கள் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. ※ **[விடை : சரி]**
5. ஹைடல்பர்க் மனிதனின் வாழ்விடம் லண்டன் ஆகும். **[விடை : சரி]**

**VI. பொருத்துக:**

அ) லோத்தல் - (i) கர்நாடகா
ஆ) ஹன்சகி பள்ளத்தாக்கு - (ii) தூத்துக்குடி மாவட்டம்
இ) ஆதிச்சநல்லூர் - (iii) நீலகிரி
ஈ) கரிக்கையூர் - (iv) குஜராத் **[விடை . அ) - iv, ஆ) - i, இ) - ii, ஈ) - iii]**

**VII. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.**

**1. பண்டமாற்று முறை என்பது என்ன?**

விடை. தம்மிடம் தேவையை விட அதிக அளவில் உள்ள பொருட்களை பிறரிடம் பரிமாற்றம் செய்து, தமக்குத் தேவையான வேறு பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல் பண்டமாற்று முறை எனப்படும்.

**2. பொ.ஆ.1850-இல் சாலைப் போக்குவரத்து பற்றி குறிப்பு வரைக.**

விடை. (i) பேருந்து, மிதிவண்டி ஆகிய இரண்டுமே காணப்படவில்லை.
(ii) மாடுகள் அல்லது கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட வண்டிகளை மக்கள் பயன்படுத்தினர்.
(iii) குதிரை வண்டிகள் அரிதாகவே தென்பட்டன.

**3. பழங்கால மக்களின் உணவு பற்றி விவரி.**

விடை. (i) பழங்கால மக்கள் உணவைத் தேடி நகர்ந்து கொண்டே இருந்தனர்.
(ii) பன்றி, மான், காட்டெருமை, காண்டாமிருகம், யானை, கரடி போன்ற விலங்குகளை வேட்டையாடினர்.
(iii) மீன் பிடிக்கவும் அவர்கள் கற்றுக்கொண்டார்கள்.
(iv) தேன் எடுப்பது, பழம் பறிப்பது, கிழங்குகளை அகழ்ந்தெடுப்பது ஆகியவற்றிலும் ஈடுபட்டனர்.
(v) காடுகளிலிருந்து தானியங்களைச் சேகரித்தனர்.

**4. சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது எவ்வாறு?**

விடை. (i) மலைகளிலிருந்து கற்கள் உருண்டு வருவதைப் பார்த்தபோது, சக்கரத்தை உருவாக்குவதற்கான சிந்தனையை அவர்கள் பெற்றிருக்கலாம்.
(ii) சக்கரம் உருவாக்கப்பட்ட நிகழ்வு மனித வரலாற்றில் ஒரு முதல்தரமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

◈◈◈



www.surabooks.com

# அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** (3 × 1 = 3)

1. **பரிணாமத்தின் வழிமுறை .................. .**
   அ) நேரடியானது ஆ) மறைமுகமானது
   இ) படிப்படியானது ஈ) விரைவானது

2. **தான்சானியா .................. கண்டத்தில் உள்ளது.**
   அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா
   இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா

3. **தாடை நீட்சி சற்று குறைந்தும், பெரிய கால் விரல்களுடனும் காணப்பட்ட மனிதர்கள் ................ .**
   அ) ஹோமோ எரக்டஸ் ஆ) ஹோமோ ஹெபிலிஸ்
   இ) நியாண்டர் தால் ஈ) ஹோமோ சேப்பியன்ஸ்

**II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக :** (1 × 1 = 1)

1. **கூற்று : உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.**
   **காரணம் : தட்பவெப்ப நிலை மாற்றமே.**
   அ) கூற்று சரி ஆ) காரணம் தவறு
   இ) கூற்றும் காரணமும் சரி. ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக :** (5 × 1 = 5)

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை .................. உலகின் பார்வைக்குக் கொண்டுவந்தார்கள்.
2. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் .................. மற்றும் .................. ஆகும்.
3. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள .................. என்னுமிடத்தில் காணப்படுகின்றன.
4. பீகிங் மனிதனின் வாழ்விடம் .................... ஆகும்.
5. ஆயுதங்கள் செய்ய ...................... கல் மிகவும் ஏற்றதாக இருந்தது.

**IV. சரியா? தவறா?** (4 × 1 = 4)

1. நாணயங்கள் பற்றிய படிப்பு மானுடவியல் ஆகும்.
2. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு.
3. பொ.ஆ.1850-இல் மாடுகள் அல்லது கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட வண்டிகளைச் சாலையில் காண முடிந்தது.
4. சுயமாக சிந்திக்கும் மனிதனாக நியாண்டர்தால் மனிதன் இருந்தான்.

**V. சரியான இணையைக் கண்டுபிடி :** (1× 1 = 1)

அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் - (i) இரு கால்களால் நடப்பது
ஆ) ஹோமோ ஹேபிலிஸ் - (ii) நிமிர்ந்து நின்ற மனிதன்
இ) ஹோமோ எரக்டஸ் - (iii) சிந்திக்கும் மனிதன்
ஈ) ஹோமோ சேப்பியன்ஸ் - (iv) முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது



www.surabooks.com

**VI. ஓரிரு வரிகளில் விடை தருக. (3 × 2 = 6)**

1. பரிணாமம் என்றால் என்ன?
2. கோடரிகள் ஏன் உருவாக்கப்பட்டன?
3. பண்டமாற்று முறை என்பது என்ன?

**VII. விரிவான விடை தருக : (1 × 5 = 5)**

1. பழங்காலம் முதல் நவீன காலம் வரை சக்கரம் வகித்து வரும் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

## விடைகள்

**I.** 1. இ) படிப்படியானது
2. ஆ) ஆப்பிரிக்கா
3. ஆ) ஹோமோ ஹெபிலிஸ்

**II.** 1. இ) கூற்றும் காரணமும் சரி.

**III.** 1. மானுடவியல் ஆய்வாளர்கள்
2. வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல்
3. கரிக்கையூர்
4. சீனா
5. சிக்கி முக்கி

**IV.** 1. தவறு
2. தவறு
3. சரி
4. தவறு

**V.** 1. அ) ஆஸ்ட்ரலோபிதிகள் - இரு கால்களால் நடப்பது

**VI.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 1.
2. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 5.
3. பார்க்க கூடுதல் வினா எண் VII - 1.

**VII.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VIII – 1.

◈◈◈

அலகு
3

# சிந்துவெளி நாகரிகம்

## கற்றல் நோக்கங்கள்

- சிந்துவெளி நாகரிகத்துக்கும், பிற சமகால நாகரிகங்களுக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளல்.
- ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் என்பதைப் புரிந்து கொள்ளல்.
- இந்த நாகரிக மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளல்.
- சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த முக்கிய இடங்களைக் கண்டறிதல்.
- இந்த இடங்களை நில வரைபடத்தில் அடையாளம் காணுதல்.



## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?**

அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்

இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி ஈ) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

**[விடை : அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்]**

**2. சிந்து வெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது?**

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்

இ) புதிய கற்காலம் ஈ) உலோகக் காலம் **[விடை : ஈ) உலோகக் காலம்]**

**3. ஆற்றங்கரைகள் 'நாகரிகத் தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்**

அ) மண் மிகவும் வளமானதால்

ஆ) சீரான கால நிலை நிலவுவதால்

இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்

ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**[விடை : ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்]**

**II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.**
**காரணம் : திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு.**

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.

இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்றும் காரணமும் தவறு.

**[விடை : அ) கூற்றும் காரணமும் சரி]**

**2. கூற்று : ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.**
**காரணம் : ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.**

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று தவறானது, காரணம் சரி.

இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை. **[விடை : அ) கூற்றும் காரணமும் சரி]**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

3. **கூற்று : ஹரப்பா மக்களின் பொறியியல் திறன் குறிப்பிடத்தக்கது.**
**காரணம் : கடலின் அலைகள், ஓதங்கள் நீரோட்டத்தைக் கணித்த பின் கப்பல் கட்டும் தளத்தைக் கட்டியிருப்பது.**
அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று தவறானது, காரணம் சரியானது.
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை. **[விடை : அ) கூற்றும் காரணமும் சரி]**

4. **கீழே கூறப்பட்டுள்ள மொகஞ்சதாரோவை பற்றிய கூற்றுகளில் எவை சரியானவை?**
அ) தங்க ஆபரணங்கள் பற்றித் தெரியவில்லை.
ஆ) வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.
இ) கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன.
ஈ) பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.
**[விடை : ஆ) வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன
ஈ) பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன]**

5. **கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.**
1. நகரங்கள், தெருக்களின் வடிவமைப்பு மற்றும் செங்கல் அளவுகள் ஆகியவற்றில் சீரான தன்மை.
2. ஒரு விரிவான மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு.
3. தானியக் களஞ்சியம் ஹரப்பா நகரங்களில் முக்கியமான பகுதியாக விளங்கியது.

**மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை?**
அ) 1 & 2 ஆ) 1 & 3
இ) 2 & 3 ஈ) அனைத்தும் சரி **[விடை : ஈ) அனைத்தும் சரி]**

6. **பொருந்தாததை வட்டமிடு.** ※
காளைகள், ஆடுகள், எருதுகள், பன்றிகள், குதிரைகள் **[விடை : பன்றிகள்]**

7. **தவறான இணையைத் தேர்ந்தெடு.**

| | | | |
|---|---|---|---|
| அ) | ASI | - (i) | ஜான் மார்ஷல் |
| ஆ) | கோட்டை | - (ii) | தானியக்களஞ்சியம் |
| இ) | லோத்தல் | - (iii) | கப்பல் கட்டும் தளம் |
| ஈ) | ஹரப்பா நாகரிகம் | - (iv) | காவிரி ஆறு |

**[விடை : ஈ) ஹரப்பா நாகரிகம் - (iv) காவிரி ஆறு]**

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. .................. மிகப் பழமையான நாகரிகம். **[விடை : மெசபடோமியா]**
2. இந்தியாவின் தொல்லியல் ஆய்வுத் துறை .................. என்ற நில அளவையாளர் உதவியுடன் தொடங்கப்பட்டது. **[விடை : அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்]**
3. .................. தானியங்கள் சேகரித்து வைக்கப் பயன்பட்டது. **[விடை : தானியக் களஞ்சியங்கள்]**
4. மக்கள் குழுக்களாகச் சேர்ந்து .................. உருவாக்குகிறார்கள். **[விடை : சமுதாயத்தை]**

## IV. சரியா? தவறா?

1. மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடமாகும். **[விடை : சரி]**
2. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வியல் துறை தொல்பொருள் ஆராய்ச்சிக்கும், நாட்டின் கலாச்சார நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பிற்கும் பொறுப்பானது. **[விடை : சரி]**
3. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. **[விடை : சரி]**
4. முதல் எழுத்துவடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது. **[விடை : தவறு]**

## V. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| அ) | மொகஞ்சதாரோ | - (i) | மேடான பகுதி |
| ஆ) | வெண்கலம் | - (ii) | சிவப்பு மணிக்கல் |
| இ) | கோட்டை | - (iii) | உலோகக் கலவை |
| ஈ) | கார்னிலியன் | - (iv) | இறந்தோர் மேடு |

**[விடை . அ] - iv, ஆ] - iii, இ] - i, ஈ] - ii]**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

**1. உலோகங்களின் பயன்களைக் கூறு.**

விடை. (i) **இரும்பும், எஃகு** – வீடு, தொழிற்சாலைகள், கட்டடங்கள் மற்றும் உந்து வண்டிகளின் பாகங்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன.

(ii) **செம்பு** – மின் உபயோகத்திற்கும் ஆபரணங்கள் செய்யவும் பயன்படுகிறது.

**2. நாம் உண்ணும் உணவில் வேக வைத்த உணவு, பச்சையான உணவு என ஒரு பட்டியலை உருவாக்கு.**

விடை. **வேக வைத்த உணவு :** அரிசி, கோதுமை, பார்லி, தினை வகைகள், எண், பருப்பு வகைகள், காய்கறி, கிழங்குகள், இறைச்சி.

**பச்சையான உணவு :** பழங்கள், காய்கள்.

**3. மிருகங்களையும், மரங்களையும் வழிபடும் பழக்கம் நம்மிடையே உள்ளதா?**

விடை. (i) ஆம்! மரங்களை வழிபடும் பழக்கம் இன்றும் உண்டு. அரசமரம், வேப்பமரம், போதிமரம், அசோகமரம், மாமரம் போன்றவற்றை மக்கள் இன்றும் வழிபடுகின்றனர்.

(ii) பசு, குரங்கு, பாம்பு, யானை போன்ற விலங்குகளையும் மக்கள் புனித விலங்குகளாகக் கருதுகின்றனர்.

**4. ஆற்றங்கரைகள் 'நாகரிகத் தொட்டில்கள்'. ஏன்?** ⊗

விடை. மனிதர்கள் தங்கள் குடியேற்றங்களாக நதிக்கரைகளைக் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் தேர்ந்தெடுத்தார்கள்.

(i) வளமான மண்.

(ii) ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும், கால்நடைகளின் தேவைகளுக்கும், நீர்ப்பாசனத்திற்கும் பயன்பட்டன.

(iii) போக்குவரத்துக்கு ஏற்ற வழிகளாக இருந்தன.

(iv) இதனால் மக்கள் ஆற்றங்கரைகளில் குடியேறினர். அங்கு நாகரிகம் தோன்றி வளர்ந்தது.

**5. ஒரு பொம்மை நகர்வதாலேயே அதை நவீன கால பொம்மைகள் என்று பொருள் கொள்ள முடியாது. சிந்து வெளி மக்கள் பொம்மைகளில் பேட்டரிக்கு [மின் கலம்] மாற்றாக எதைப் பயன்படுத்தினர்?**

விடை. சிந்துவெளி மக்கள் பொம்மைகளில் மின்கலங்களுக்கு மாற்றாக, சக்கரங்களைப் பயன்படுத்தினர்.

**6. நீ ஒரு தொல்பொருள் ஆய்வாளர் எனில் என்ன செய்வாய்?**

விடை. நான் ஒரு தொல்பொருள் ஆய்வாளர் எனில், அக்கால மக்களின் கைவேலைப்பாடுகள் கிடைக்கப்படும் இடங்களைக் கண்டறிந்து, அக்கால மக்களைப் பற்றியும், அவர்களின் வேலைபாட்டுத் திறன்களைப் பற்றியும் மென்மேலும் தெரிந்து கொள்ளத் தலைப்படுவேன்.

**7. இந்திய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இரு பகுதிகளைக் கூறு.**

விடை. (i) ராஜஸ்தானிலுள்ள **காலிபங்கன்.** ⊗

(ii) குஜராத்திலுள்ள **தோலவிரா.**

**8. சிந்துவெளி நாகரிகத்தின் கூறுகளில் உன்னைக் கவர்ந்தது எது? ஏன்?**

விடை. சிந்து வெளி நாகரித்தின் கூறுகளில் என்னைக் கவர்ந்தது அங்கிருந்த பெருங்குளம் ஆகும்.

**காரணம் :**

(i) நீர் கசியாமல் இருப்பதற்காக அதன் சுவரிலும், தளத்திலும் பல அடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தது.

(ii) குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.

(iii) நகரின் நடுவில் அமைக்கப்பட்டது.

(iv) அருகிலிருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது.

(v) பயன்படுத்தப்பட்ட நீர் வெளியேறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

**9. தற்காலத்தில் பொருட்களின் நிறையை அளக்க என்ன கருவி பயன்படுத்தப்படுகிறது?**

**விடை.** தற்காலத்தில் பொருள்களின் நிறையை அளக்க எடைக் கருவிகளான 'வில் தராசு' மற்றும் 'எடை அளவீடுகள்' பயன்படுத்தப்படுகின்றன.

## VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

**1. புதைந்த கட்டிடங்களைக் கண்டுபிடிக்க தற்போது எந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது?**

**விடை.** வான்வழி புகைப்படங்கள் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள். நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை பயன்படுத்துகின்றனர்.

**2. சிந்துவெளி நாகரிகம் வெண்கல கால நாகரிகம் என ஏன் அழைக்கப்படுகிறது?** ⨷

**விடை.** மக்கள் வெண்கலத்தாலான பொருட்களைப் பயன்படுத்தினர் என்பதால் சிந்துவெளி நாகரிகம் வெண்கல கால நாகரிகம் என்றழைக்கப்படுகிறது.

**3. சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம். காரணம் கூறு.**

**விடை.** சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம் என்பதற்கான காரணங்கள் :

(i) சிறப்பான நகரத் திட்டமிடல்.

(ii) சிறப்பான கட்டிடக்கலை வேலைப்பாடு.

(iii) தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை.

(iv) தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்.

(v) விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கான திடமான அடித்தளம்.

**4. கழிவு நீர் வடிகால் அமைப்பின் சிறப்பைக் கூறு.**

**விடை.** (i) ஏறத்தாழ எல்லா நகரங்களிலும் மூடப்பட்ட கழிவு நீர் வடிகால் அமைப்பு இருந்தது. வடிகால்கள் செங்கற்களைக் கொண்டும் கல்தட்டைகளைக் கொண்டும் மூடப்பட்டிருந்தன.

(ii) வடிகால் கழிவு நீர் தேங்காமல் செல்ல வசதியாக லேசான மென்சரிவைக் கொண்டிருந்தது.

(iii) கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான துளைகளும் சரியான இடைவெளியில் அமைக்கப்பட்டிருந்தன.

(iv) வீட்டிலிருந்து கழிவுநீர் பல தெருக்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலமாக முக்கிய வடிகால்களைச் சென்றடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

(v) ஒவ்வொரு வீட்டிலும் திடக் கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக்கழிவுகளைத் தேக்கி, கழிவு நீரை மட்டும் வெளியேற்றின.

**5. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.** ⨷

**விடை.** (i) இந்த பெருங்குளமானது நன்கு அகன்று, செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும்

(ii) இது நகரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. நீர் கசியாத கட்டுமானத்துக்கான மிகப் பழமையான சான்று எனலாம்.

(iii) இக்குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும், தளத்திலும் பல அடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தது.

(iv) வடபுறத்திலிருந்தும், தென்புறத்திலிருந்தும் குளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் உள்ளன.

(v) அருகில் இருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது. உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

**6. சிந்துவெளி மக்கள் வெளிநாட்டினருடன் வணிகத்தில் ஈடுபட்டனர் என்பதை நீ எவ்வாறு அறிந்து கொள்கிறாய்?**

**விடை.** (i) மெசபடோபியாவுடன் விரிவான கடல் வணிகம் நடைபெற்றிருக்கிறது. சிந்து வெளி முத்திரைகள் தற்கால ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளை குறிக்கும் பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளது இதை உறுதிப்படுத்துகிறது.

(ii) சுமேரியாவின் அக்காடியப் பேரரசிற்குட்பட்ட அரசன் நரம்-சின் என்பவர் சிந்து வெளிப் பகுதியிலுள்ள மெலுக்கா என்னும் இடத்தில் இருந்து அணிகலன் வாங்கியதாக நரம்-சின் குறித்த காவியத்தில் கூறப்பட்டுள்ளது.

(iii) பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப்பகுதியிலும் காணப்படுகின்றன. இது இந்த இரு பகுதிகளிலும் வணிகம் நடந்ததைக் காட்டுகிறது .

(iv) தற்கால குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்.

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ளச் சிந்துவெளியின் சிறப்பம்சங்களைக் கவனித்துத் தற்காலத்துடன் ஒப்பிடுக.**

**1. விளக்குக் கம்பங்கள்**
**2. சுட்ட செங்கற்கள்**
**3. நிலத்தடி வடிகால் அமைப்பு**
**4. எடைகள் மற்றும் அளவீடு**
**5. கப்பல் கட்டும் தளம்**

விடை. **1. விளக்குக் கம்பங்கள் :**

(i) சிந்து வெளியில் சில இடங்களில் மட்டுமே விளக்குக் கம்பங்கள் இருந்தன.

(ii) இன்று குறிப்பிட்ட இடைவெளியில் எல்லாத் தெருக்களிலும் விளக்குக்கம்பங்கள் உள்ளன.

**2. சுட்ட செங்கற்கள் :**

(i) சிந்து வெளியின் எல்லா நகரங்களிலும் மூடப்பட்ட கழிவு நீர் வடிகால் அமைப்பு இருந்தது. இது செங்கல், கல் தட்டை ஆகியவற்றால் மூடப்பட்டிருந்தது.

(ii) இன்றும் வீடுகளும் பிற கட்டுமானங்களும் சுட்ட செங்கற்களால் கட்டப்படுகின்றன.

**3. நிலத்தடி வடிகால் அமைப்பு :**

(i) சிந்து வெளியின் எல்லா நகரங்களிலும் மூடப்பட்ட கழிவு நீர் வடிகால் அமைப்பு இருந்தது. இது செங்கல், கல்தட்டை ஆகியவற்றால் மூடப்பட்டிருந்தது.

(ii) இப்போது பல இடங்களில் மூடப்பட்ட வடிகால் அமைப்பு இருந்தாலும், சில இடங்களில் திறந்த நிலையில்தான் உள்ளது.

**4. எடைகள் மற்றும் அளவீடு :**

(i) சிந்து வெளி மக்கள் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகளை பயன்படுத்தினர். நீளத்தை அளவிட, அளகுகள் குறிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினர்.

(ii) தற்போது நாம் எடைபோட மின்னணு எடை இயந்திரத்தைப் பயன்படுத்துகிறோம்.

**5. கப்பல் கட்டும் தளம் :**

(i) குஜராத்தில் உள்ள லோத்தல் என்ற இடத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்று இருந்தது.

(ii) தற்போது கொச்சி, விசாகப் பட்டினம், மும்பை உட்பட 19 கப்பல் கட்டும் தளங்கள் உள்ளன.

**2. வேளாண்மை சிந்துவெளி மக்களின் தொழில்களுள் ஒன்று - எவ்வாறு நிரூபிப்பாய்? [கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களை வைத்து].**

விடை. (i) சிந்து வெளி மக்கள் கோதுமை, பார்லி, தினை வகைகள், எள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவற்றை பயிரிட்டனர்.

(ii) இவற்றை சேகரித்து வைக்க தானியக் களஞ்சியங்கள் கட்டப்பட்டன.

(iii) செங்கல் சுவரால் ஆன தானியக் களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

(iv) இவற்றில் மூலம் சிந்துவெளி மக்களின் தொழில்களுள் வேளாண்மையும் ஒன்று என அறியலாம்.

**3. மண்பாண்டங்களும் அதன் உடைந்த துண்டுகளும் சிந்துவெளி பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நீ அறிவது என்ன?**

விடை. (i) மட்பாண்டங்களைச் சக்கரங்கள் கொண்டு உருவாக்கினர். அவை தீயிலிட்டுச் சுடப்பட்டன. இது அவர்களின் திறமையைக் காட்டுகிறது.

(ii) மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணத்தில் இருந்தன. அதில் கருப்பு வண்ணத்தில் அழகிய வேலைப்பாடுகளைச் செய்தனர். இது அவர்களின் ஓவிய ஈடுபாட்டைக் காட்டுகிறது.

(iii) அங்கு கிடைத்த உடைந்த பானைத் துண்டுகள் விலங்குகளின் உருவங்களுடனும், வடிவியல் வடிவமைப்புகளுடனும் காணப்படுகின்றன. இது அவர்கள் விலங்குகளை வளர்த்தனர் என்பதையும், அவர்களது கலைத்திறனையும் காட்டுகிறது.

(iv) உணவை சமைத்து உண்டனர் என்பதை மட்பாண்டங்கள் வெளிப்படுத்தின.

**4. லோத்தல் ஒரு கப்பல் கட்டும் தளம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் அறிவது என்ன?**

**விடை.** தற்கால குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.

**5. ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணம் என்ன?**

**விடை. ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கான காரணங்கள் :**

**(i)** ஆற்றின் கரையில் உள்ள அதன் நகரங்களில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு.
**(ii)** சுற்றுச்சூழல் மாற்றம்.
**(iii)** படையெடுப்பு.
**(iv)** இயற்கைச் சீற்றங்கள்.
**(v)** காலநிலை மாற்றம். **(vi)** காடுகள் அழிதல்.
**(vii)** தொற்று நோய்த் தாக்குதல் போன்றவை ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணமாயின.

## IX. மாணவர் செயல்பாடு.

**குறுக்கெழுத்து**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | | | | | (2) | | | | |
| | | | | (4) | | | | | | | (6) |
| | | | | (5) | | | | | | | |
| | | | | | | | | | | | (7) |
| | | | | | | | | (8) | | | |
| (10) | | | | | | | | | | | |

**இடமிருந்து வலம்**

(4) ஒவ்வொரு வீட்டிலும் .................. இருந்தது.
(5) இது .................. கால நாகரிகம்.
(10) தானியங்களை சேகரித்து வைக்கப் பயன்பட்டது.

**வலமிருந்து இடம்**

(2) மொஹஞ்சதாரோவை விட பழமையானது.
(6) இது நீர் கசியாமல் இருக்கப் பூசப்பட்டது.
(7) இது தான் தொல்பொருள் ஆய்விற்கு பொறுப்பு வகிக்கிறது.

**மேலிருந்து கீழ்**

(1) கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
(3) இந்திய தொல்பொருள் ஆய்வியல் துறையின் இயக்குநராக இருந்தவர்.

**கீழிருந்து மேல்**

(8) சிந்துவெளி மக்களுக்கு இதன் பயன் தெரியாது

**விடை.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) லோ | | பா | ப் | ர | ஹ (2) | | | (3) மா | |
| | | த் | | (4) க | த | வு | | பு | | ர் | தா (6) |
| | | த | | (5) வெ | ண் | க | ல | ம் | | ஷ | |
| றை | து | ல் | ய | வி | ய் | ஆ | ள் | ரு | பொ | ல் | (7) தொ |
| | | | | | | | | (8) இ | | | |
| (10) தா | னி | ய | க் | க | ள | ஞ் | சி | ய | ம் | | |



www.surabooks.com

**வினாடி - வினா.**

1. **சிந்துவெளி மக்கள் ஆடை தயாரிக்க எதைப் பயன்படுத்தினர்?**

**விடை.** பருத்தி.

2. **முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நாகரிக நகரம் எது?**

**விடை.** ஹரப்பா.

3. **சிந்துவெளி நாகரிகம் எங்கு இருந்தது?**

**விடை.** சிந்து நதிக்கரையில்

4. **எந்த விலங்கு வண்டி இழுக்கப் பயன்பட்டது?**

**விடை.** எருது.

5. **சிந்துவெளி மக்களுக்கு எந்த உலோகம் பற்றித் தெரியாது?**

**விடை.** இரும்பு.

6. **பானை செய்வதற்கு எதைப் பயன்படுத்தினர்?**

**விடை.** சக்கரம்.


7. **உலகின் நான்கு பழம்பெரும் நாகரிங்களில் மிகப் பழமையானது எது?**

**விடை.** சிந்துவெளி நாகரிகம்.

## XI. வரைபடம்

1. **இந்திய எல்லைக்குள் சிந்துவெளி நாகரிகம் காணப்பட்ட ஏதேனும் நான்கு பகுதிகளைக் குறிக்கவும்.**
2. **இந்திய ஆறுகளுக்கான வரைபடத்தில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த பகுதிகளை வண்ணமிட்டுக் காட்டுக.**
3. **கீழ்க்காணும் பகுதிகளைக் கொடுக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கவும்.**

   1. மொஹஞ்சதாரோ 2. சான்கு தாரோ 3. ஹரப்பா
   4. மெஹர்கர் 5. லோத்தல்



## XII. கட்டக வினாக்கள்.

| | | |
|---|---|---|
| **சார்லஸ் மேசன் எதைப் பார்த்தார்?**<br>**விடை :**<br>செங்கல் திட்டுகள் | **சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய பொருள்களுள் தற்போது நாம் எவற்றையெல்லாம் பயன்படுத்துகிறோம்? [ஏதேனும் மூன்று கூறு]**<br>**விடை :**<br>செங்கல், வெண்கலம், சக்கரம் | **வேறு என்னென்ன பொருள்கள் எல்லாம் கிடைத்துள்ளன?**<br>**விடை :**<br>மட்பாண்டங்கள், முத்திரைகள், கைவினைப் பொருட்கள், பொம்மைகள் முதலியன. |
| **சிந்துவெளி மக்களுக்குத் தெரியாத மூன்றைக் கூறு?**<br>**விடை :** இரும்பு, குதிரை, தங்கம் | **எந்த உலோகம் சிந்துவெளி மக்களுக்குத் தெரியாது?**<br>**விடை :** இரும்பு | **உலகின் மிகப் பழமையான நாகரிகம் எது?**<br>**விடை :**<br>மெசபடோமிய நாகரிகம் |
| **முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு நாய் ஏன்?**<br>**விடை :**<br>அவர்கள் வேட்டைக்கு செல்லும் போது பாதுகாப்பளித்தன | **முதன் முதலில் பருத்திச் செடியை வளர்த்தவர்கள் யார்?**<br>**விடை :** சிந்துவெளி மக்கள் | **எந்த நிறுவனம் புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பொறுப்பானது?**<br>**விடை :**<br>இந்தியத் தொல்லியல் துறை |
| **தமிழ்நாட்டில் ஏதேனும் ஆற்றங்கரை நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?**<br>**விடை :**<br>வைகை நதிக்கரையில் (கீழடி அகழாய்வு) | **சிந்துவெளி நாகரிகம் பரவிய இரண்டு இடங்கள் எவை? [இந்தியாவின் எல்லைக்குள்]**<br>**விடை :**<br>லோத்தல், காலிபங்கன் | **சிந்துவெளி நகரங்கள் குழந்தைகளுக்கான நகரங்கள் என நாம் கூறமுடியுமா?**<br>**விடை :**<br>ஆம்! அவர்கள் பயன்படுத்திய பொம்மைகளின் மூலம். |

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

**1. மொஹஞ்ச தாரோவில் கிடைத்த 'நடன மாது' சிலை ...................... ஆல் ஆனது.**
அ) செம்பு ஆ) இரும்பு
இ) வெண்கலம் ஈ) தங்கம் **[விடை : இ] வெண்கலம்]**

**2. தமிழ்ச் சொற்களை பிரதிபலிக்கும் வகையில் காவிரி என்ற ஆறு, ............. நாட்டில் ஓடுகிறது.**
அ) ஆப்கானிஸ்தான் ஆ) பாகிஸ்தான்
இ) சீனா ஈ) ஈரான் **[விடை : அ] ஆப்கானிஸ்தான்]**

**3. சிவிஸ் (civis) என்ற வார்த்தை பண்டைய ................ மொழி வார்த்தை ஆகும்.**
அ) கிரேக்க ஆ) லத்தீன்
இ) ஜெர்மன் ஈ) சமஸ்கிருத **[விடை : ஆ] லத்தீன்]**

**4. கிசே பிரமிடு பொ.ஆ.மு. 2,500-இல் குஃபு மன்னனால் ................ கொண்டு கட்டப்பட்டது.**
அ) கருங்கல் ஆ) செங்கல்
இ) சுண்ணாம்புக் கல் ஈ) ஸ்லேட் என்ற கற்கள்
**[விடை : இ] சுண்ணாம்புக் கல்]**

www.surabooks.com



**5. இந்தியத் தொல்லியல் துறையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ................. .**

அ) புது தில்லி ஆ) கொல்கத்தா
இ) மும்பை ஈ) சென்னை **[விடை : அ] புது தில்லி]**

## II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. கூற்று : பெருங்குளம் நன்கு அகன்று அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும்.**
**காரணம் : சுவரிலும், தளத்திலும், நீர் கசியாமல் இருப்பதற்காக, பல அடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தது.**

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்றும் காரணமும் தவறு.
**[விடை : அ] கூற்றும் காரணமும் சரி]**

**2. கூற்று : ஹரப்பா நகரம் திட்டமிடப்பட்ட இரண்டு பகுதிகளாக இருந்தது.**
**காரணம் : வீடுகள் ஒன்று அல்லது இரண்டு மாடி அடுக்குகளை உடையனவாக காணப்படுகின்றன.**

அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று தவறானது, காரணம் சரி.
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை. **[விடை : அ] கூற்றும் காரணமும் சரி]**

**3. கூற்று : குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.**
**காரணம் : அவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை இது உறுதிபடுத்துகிறது.**

அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று தவறானது, காரணம் சரியானது.
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை. **[விடை : அ] கூற்றும் காரணமும் சரி]**

**4. கீழே கூறப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை?**

அ) சிந்து வெளி மக்கள் பருத்தி ஆடைகள் மட்டுமின்றி, பட்டு ஆடைகளையும் பயன்படுத்தினர்.
ஆ) பெண்கள் மட்டுமே ஆபரணங்களை விரும்பி அணிந்தனர்.
இ) குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன.
ஈ) கம்பளி ஆடை பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை.
**[விடை : இ] குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன]**

**5. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.**

1. ஹரியானா மாநிலத்திலுள்ள ராகிகர்கியில் தானியக்களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்டது.
2. பெருங்குளம் சதுர வடிவில் அகன்று அமைந்திருந்தது.
3. குஜராத் மாநிலத்தில் தந்தத்தினால் ஆன அளவுகோல் கண்டுபிடிக்கப்பட்டது.

**மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை?**

அ) 1 & 2 சரி ஆ) 1 & 3 சரி
இ) 2 & 3 சரி ஈ) அனைத்தும் சரி **[விடை : ஆ] 1 & 3 சரி]**

**6. பொருந்தாததை வட்டமிடு.**

படையெடுப்பு, காடுகள் அழிதல், தொற்று நோய் தாக்குதல், எரிமலை வெடிப்பு, காலநிலை மாற்றம்
**[விடை : எரிமலை வெடிப்பு]**

**7. தவறான இணையைத் தேர்ந்தெடு.**

அ) மெசபடோமிய நாகரிகம் - (i) 3500 - 2000 பொ.ஆ.மு
ஆ) சிந்துவெளி நாகரிகம் - (ii) 3300 - 1900 பொ.ஆ.மு
இ) எகிப்து நாகரிகம் - (iii) 3100 - 1800 பொ.ஆ.மு
ஈ) சீன நாகரிகம் - (iv) 1700 - 1122 பொ.ஆ.மு
**[விடை : இ] எகிப்து நாகரிகம் - (iii) 3100 - 1800 பொ.ஆ.மு]**

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** .................. ஆண்டில் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஹரப்பா மற்றும் மொஹஞ்ச-தாரோ நகரங்களை அகழாய்வு செய்ய ஆரம்பித்தனர். **[விடை : 1920]**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

2. ................ ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறை நிறுவப்பட்டது. **[விடை : 1861]**

3. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநராக 1924-இல் இருந்தவர் ................. . **[விடை : ஜான் மார்ஷல்]**

4. குஜராத்தில் சபர்மதி ஆறு மற்றும் அதன் துணை ஆறாகிய போகவோவிற்கு இடையே அமைந்துள்ள இடம் ................. . **[விடை : லோத்தல்]**

5. முதல் எழுத்து வடிவம் ................. களால் உருவாக்கப்பட்டது. ※ **[விடை : சுமேரியர்]**

## IV. சரியா? தவறா?

1. சிந்து வெளி நாகரிகம் 6 பெரிய நகரங்களை உள்ளடக்கியது. **[விடை : சரி]**

2. பெருங்குளமானது நன்கு அகன்று சதுர வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும். **[விடை : தவறு]**

3. தானியக் களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்திலுள்ள ராகி கர்கியில் கண்டுபிடிக்கப்பட்டது. **[விடை : சரி]**

4. ஆரக்கால் இல்லாத, திடமான சக்கரங்களைக் கொண்ட வண்டிகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினர். **[விடை : சரி]**

5. மனிதர்களால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட உலோகம் இரும்பு. **[விடை : தவறு]**

## V. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| அ) | சார்லஸ் மேசன் | - (i) | போலன் ஆற்றுப்பள்ளத்தாக்கு |
| ஆ) | இரண்டாம் ராமெசிஸ் | - (ii) | ஒரு பொருளின் வயதை அறிதல் |
| இ) | மெஹர்கர் | - (iii) | கிழக்கிந்திய கம்பெனி படைவீரர் |
| ஈ) | பெருங்குளம் | - (iv) | எகிப்து அரசன் |
| உ) | கதிரியக்க கார்பன் முறை | - (v) | செவ்வக வடிவம் |

**[விடை . அ] - iii, ஆ] - iv, இ] - i, ஈ] - v], உ] - ii]]**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

**1. சிந்து வெளி மக்களின் அணிகலன்கள் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

**விடை.** (i) ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்தனர்.

(ii) கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள், மோதிரங்கள், காதணிகள் மற்றும் காலணிகள் முதலியவற்றையும் அணிந்தனர்.

(iii) தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டன.

**2. ராகி கர்கி - பற்றி ஒரு குறிப்பு வரைக.**

**விடை.** (i) ராகிகர்கி ஹரியானா மாநிலத்திலுள்ள ஒரு கிராமம்.

(ii) செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக் களஞ்சியம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டது.

(iii) இது முதிர்ச்சியடைந்த ஹரப்பா காலத்தைச் சார்ந்தது.

**3. கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன?**

**விடை.** (i) சுட்ட செங்கற்கள் வலுவானவை, கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை.

(ii) நெருப்பைக் கூட தாங்குபவை.

(iii) மேலும் அவை நீரினால் கரைவதில்லை.

**4. தொடக்ககால நாகரிகங்களின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

**விடை.** (i) மெசபடோமியன் நாககிகம் (ii) சிந்து வெளி நாகரிகம்

(iii) சீன நாகரிகம் (iv) எகிப்து நாகரிகம்

**5. சிந்துவெளி மக்களின் தொழில்கள் யாவை?**

**விடை.** (i) சிந்துவெளி மக்கள் வேளாண்மை, கைவினைப் பொருட்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

(ii) கால்நடை வளர்ப்பும் அவர்களது தொழிலாக இருந்தது.

(iii) அங்கு வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களும் இருந்தனர்.

**6. பண்டைய மெசபடோமியா தற்காலத்தில் எந்த பெயர் கொண்ட பகுதிகளாக அறியப்படுகிறது?**

**விடை.** பண்டைய மெசபடோமியா, தற்காலத்தில் ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளாக அறியப்படுகிறது.

◈◈◈

# அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** **(4 × 1 = 4)**

**1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?**

அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி ஈ) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

**2. ஆற்றங்கரைகள் 'நாகரிகத் தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்**

அ) மண் மிகவும் வளமானதால் ஆ) சீரான காலநிலை நிலவுவதால்
இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்
ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**3. மொஹஞ்ச தாரோவில் கிடைத்த 'நடன மாது' சிலை ........................ ஆல் ஆனது.**

அ) செம்பு ஆ) இரும்பு இ) வெண்கலம் ஈ) தங்கம்

**4. இந்தியத் தொல்லியல் துறையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் .................. .**

அ) புது தில்லி ஆ) கொல்கத்தா இ) மும்பை ஈ) சென்னை

**II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக :** **(1 × 1 = 1)**

**1. கூற்று : ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.**
**காரணம் : ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.**

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று தவறானது, காரணம் சரி.
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக :** **(4 × 1 = 4)**

1. .................. மிகப் பழமையான நாகரிகம்.
2. மக்கள் குழுக்களாகச் சேர்ந்து .................. உருவாக்குகிறார்கள்.
3. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநராக 1924-இல் இருந்தவர் .................. .
4. குஜராத்தில் சபர்மதி ஆறு மற்றும் அதன் துணை ஆறாகிய போகவோவிற்கு இடையே அமைந்துள்ள இடம் ................. .

**IV. பொருத்துக :** **(5 × 1 = 5)**

| | | | |
|---|---|---|---|
| அ) | வெண்கலம் | (i) | போலன் ஆற்றுப்பள்ளத்தாக்கு |
| ஆ) | கார்னிலியன் | (ii) | கிழக்கிந்திய கம்பெனி படைவீரர் |
| இ) | பெருங்குளம் | (iii) | சிவப்பு மணிக்கல் |
| ஈ) | சார்லஸ் மேசன் | (iv) | உலோகக் கலவை |
| உ) | மெஹர்கர் | (v) | செவ்வக வடிவம் |

**V. ஓரிரு வரிகளில் விடை தருக :** **(3 × 2 = 6)**

1. உலோகங்களின் பயன்களைக் கூறு.
2. ஆற்றங்கரைகள் 'நாகரிகத் தொட்டில்கள்' - ஏன்?
3. கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன.

**VI. விரிவான விடை தருக :** **(1 × 5 = 5)**

1. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.

## விடைகள்

**I.** 1. அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்
2. ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்
3. இ) வெண்கலம் 4. அ) புது தில்லி

**II.** 1. ஆ) கூற்றும் காரணமும் சரி

**III.** 1. மெசபடோமியா 2. சமுதாயத்தை 3. ஜான் மார்ஷல் 4. லோத்தல்

**IV.** அ) - iv, ஆ) - iii, இ) - v, ஈ) - ii, உ) - i

**V.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VI - 1. 2. பார்க்க பாடப்புத்தக, வினா எண் VI - 4.
3. பார்க்க பாடப்புத்தக வினா எண் VI - 3.

**VI.** 1. பார்க்க பாடப்புத்தக வினா எண் VII - 5.

◈◈◈



www.surabooks.com

# அலகு 4 தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

**கற்றல் நோக்கங்கள்**

- பண்டைய தமிழக நகரங்களின் பெருமையைத் தெரிந்து கொள்ளல்.
- பூம்புகார் நகரத்தைப் பற்றி அறிதல்.
- மதுரை நகரத்தின் சிறப்பை உணர்தல்.
- காஞ்சி நகரத்தின் மாண்பினை அறிந்து கொள்ளல்.
- பண்டைய தமிழகத்தின் ஆட்சியாளர்களை அறிதல்.
- பண்டைய தமிழகத்தின் கைவினைக் கலைகள், சந்தைகள், உற்பத்தியாளர்கள், கடல் கடந்து நடந்த வணிகம், கல்வி மற்றும் நீர் மேலாண்மை பற்றி அறிதல்.



## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**1. 6500 ஆண்டுகளுக்கும் பழமையான நாகரிகத்தின் நகரம்**

அ) ஈராக் ஆ) சிந்துவெளி
இ) தமிழகம் ஈ) தொண்டைமண்டலம் **[விடை : ஆ) சிந்துவெளி]**

**2. இவற்றுள் எது தமிழக நகரம்?**

அ) ஈராக் ஆ) ஹரப்பா
இ) மொகஞ்சதாரோ ஈ) காஞ்சிபுரம் **[விடை : ஈ) காஞ்சிபுரம்]**

**3. வங்காள விரிகுடாவுடன் தொடர்பில்லாத நகரம்** ※

அ) பூம்புகார் ஆ) தொண்டி
இ) கொற்கை ஈ) காஞ்சிபுரம் **[விடை : ஈ) காஞ்சிபுரம்]**

**4. தமிழர்களின் நீர்மேலாண்மையை விளக்குவது**

i) கல்லணை ii) காஞ்சிபுர ஏரிகள்
iii) பராக்கிரம பாண்டியன் ஏரி iv) காவிரிஆறு
அ) i மட்டும் சரி ஆ) ii மட்டும் சரி
இ) iii மட்டும் சரி ஈ) i மற்றும் ii சரி

**[விடை : ஈ) i மற்றும் ii சரி]**

**5. பின்வருவனவற்றுள் எது தொன்மையான நகரமல்ல?**

அ) மதுரை ஆ) காஞ்சிபுரம்
இ) பூம்புகார் ஈ) சென்னை **[விடை : ஈ) சென்னை]**

**6. கீழடி அகழாய்வுகளுடன் தொடர்புடைய நகரம்**

அ) மதுரை ஆ) காஞ்சிபுரம்
இ) பூம்புகார் ஈ) ஹரப்பா **[விடை : அ) மதுரை]**

## II. கூற்றுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **கூற்று :** பூம்புகார் நகரத்திலிருந்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதியும், இறக்குமதியும் நடைபெற்றது.

**காரணம் :** வங்காளவிரிகுடா கடல் போக்குவரத்திற்கு ஏதுவாக அமைந்ததால் அண்டைய நாடுகளுடன் வணிகம் சிறப்புற்றிருந்தது.

அ) கூற்று சரி; காரணம் தவறு. ஆ) கூற்று சரி; கூற்றுக்கான காரணமும் சரி.
இ) கூற்று தவறு; காரணம் சரி. ஈ) கூற்று தவறு; காரணம் தவறு.

**[விடை : ஆ] கூற்று சரி; கூற்றுக்கான காரணமும் சரி]**

2. **அ] திருநாவுக்கரசர், "கல்வியில் கரையில" எனக் குறிப்பிட்ட நகரம் காஞ்சிபுரம்.**
**ஆ] இந்தியாவின் ஏழு புனிதத் தலங்களுள் ஒன்று என யுவான்சுவாங் குறிப்பிட்டது காஞ்சிபுரம்.**
**இ] நகரங்களுள் சிறந்தது காஞ்சிபுரம் என காளிதாசர் குறிப்பிட்டுள்ளார்.**

அ) i மட்டும் சரி ஆ) ii மட்டும் சரி
இ) iii மட்டும் சரி ஈ) அனைத்தும் சரி **[விடை : ஈ] அனைத்தும் சரி]**

3. **சரியான தொடரைக் கண்டறிக.**

அ) நாளங்காடி என்பது இரவு நேரக் கடை.
ஆ) அல்லங்காடி என்பது பகல் நேரக் கடை.
இ) ரோமானிய நாட்டு நாணயம் தயாரித்த தொழிற்சாலை கிடைத்தது பூம்புகார்.
ஈ) கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

**[விடை : ஈ] கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது]**

4. **தவறான தொடரைக் கண்டறிக.**

அ) மெகஸ்தனிஸ் தன்னுடைய பயணக் குறிப்புகளில் மதுரையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
ஆ) யுவான் சுவாங் தமிழ்நாட்டு நகரான காஞ்சிபுரத்திற்கு வந்தார்.
இ) கோவலனும், கண்ணகியும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர்.
ஈ) ஈராக் நகரம் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[விடை : இ] கோவலனும், கண்ணகியும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர்]**

5. **சரியான இணையைக் கண்டறிக.**

அ) கூடல் நகர் - பூம்புகார்
ஆ) தூங்கா நகரம் - ஹரப்பா
இ) கல்வி நகரம் - மதுரை
ஈ) கோயில்களின் நகரம் - காஞ்சிபுரம் **[விடை : ஈ] கோயில்களின் நகரம் - காஞ்சிபுரம்]**

6. **தவறான இணையைக் கண்டறிக.**

அ) வட மலை - தங்கம்
ஆ) மேற்கு மலை - சந்தனம்
இ) தென்கடல் - முத்து
ஈ) கீழ்கடல் - அகில் **[விடை : ஈ] கீழ் கடல் - அகில்]**

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டியவர் .................. . **[விடை : ராஜசிம்ம பல்லவன்]**
2. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது .................. . ⨷ **[விடை : காஞ்சிபுரம்]**
3. மாசாத்துவன் எனும் பெயர் தரும் பொருள் .................. . **[விடை : ஒரு பெரிய வணிகன்]**

## IV. சரியா? தவறா?

1. பூம்புகாரில் நடைபெற்ற அண்டைநாட்டு வணிகத்தின் மூலமாகப் பண்பாட்டுப் பரிமாற்றம் நடைபெற்றது. **[விடை : சரி]**
2. மதுரையில் அல்லங்காடியில் பெண்கள் பயமின்றி இரவு நேரங்களில் பொருட்கள் வாங்கிச் சென்றனர். **[விடை : சரி]**
3. பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. **[விடை : சரி]**
4. போதிதர்மர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர். **[விடை : சரி]**



www.surabooks.com

www.surabooks.com



**V. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. ஏற்றுமதி என்றால் என்ன?**

**விடை.** ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தேவைக்குப்போக எஞ்சியவற்றை மற்றொரு நாட்டின் மக்களுக்காக அனுப்பப்படும் முறைக்கு 'ஏற்றுமதி' என்று பெயர்.

**2. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பியம் மற்றும் சங்கப்பாடல் நூலைக் கூறு.**

**விடை. காப்பியம்** : சிலப்பதிகாரம் / மணிமேகலை.

**சங்கப்பாடல் நூல்** : பட்டினப்பாலை.

**3. தொண்டை நாட்டின் தொன்மையான நகரம் எது?**

**விடை.** தொண்டை நாட்டின் தொன்மையான நகரம் காஞ்சிபுரம்.

**4. கிராமத்திற்கும், நகரத்திற்கும் உள்ள ஏதேனும் ஒரு வேறுபாட்டைக் கூறு.**

**விடை. கிராமம்** : குறைந்த குடியிருப்புகளுடன் குறைவான மக்கள் தொகையுடன் உள்ளவை கிராமம் ஆகும்.

**நகரம்** : பெரிய அளவில் திட்டமிடப்பட்டு அதிகமான குடியிருப்புகளுடன், அதிக மக்கள் தொகை கொண்டவை 'நகரம்' எனப்படும்.

**5. லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நாகரிகம் எது?**

**விடை.** லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நாகரிகம் சிந்துவெளி நாகரிகம்.

**6. உலகின் தொன்மையான நாகரிகம் எது?** ⊗

**விடை.** உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் மெசபடோமியா நாகரிகம்.

**VI. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.**

**1. இந்தியாவின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.**

**விடை.** ஹரப்பா, மொகஞ்சதாரோ, மதுரை, காஞ்சி, பூம்புகார் ஆகியவை மிகவும் புகழ்பெற்ற நகரங்கள் ஆகும்.

**2. தமிழகத்தின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.**

**விடை.** பூம்புகார், மதுரை, காஞ்சி ஆகிய இம் மூன்று நகரங்கள் மட்டுமல்லாமல் கொற்கை, வஞ்சி, தொண்டி, உறையூர், தகடூர், முசிறி, கருவூர், மாமல்லபுரம், தஞ்சை, காயல் போன்ற நகரங்களும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன. இதற்கான சான்றுகள் மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

**3. தமிழக நகரங்கள் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை?**

**விடை.**
- (i) இரட்டை காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பட்டினப்பாலையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.
- (ii) கிரேக்க வரலாற்றாசிரியர் மெஸ்தனிசின் குறிப்புகளில் மதுரையைப்பற்றி உள்ளது.
- (iii) சாணக்கியர் தனது அர்த்த சாஸ்திரத்தில் மதுரையைப் பற்றி கூறியுள்ளார்.
- (iv) சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங், காஞ்சியைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- (v) கவிஞர் காளிதாசர், திருநாவுக்கரச நாயன்மார் ஆகியோர் காஞ்சியைப் புகழ்ந்துள்ளனர்.

**4. மதுரையை ஆண்ட தமிழ் மன்னர்கள் பற்றி குறிப்பிடுக.**

**விடை.** பண்டைய காலத்தில் மதுரையை முறையே பாண்டியர்களும், சோழர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். இடைக்காலத்தில் பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும், அவர்களைத் தொடர்ந்து நாயக்கர்களும் ஆட்சி புரிந்தனர்.

**5. மதுரைக்கு வழங்கப்படும் வேறு சில பெயர்களைக் குறிப்பிடுக.** ⊗

**விடை.**
- (i) சங்கம் வளர்த்த நகரம்.
- (ii) தூங்கா நகரம்.
- (iii) கூடல் நகர்.

**6. நாளங்காடி, அல்லங்காடி - வேறுபடுத்துக.**

**விடை.**
- (i) நாளங்காடி என்பது பகல் பொழுதிலான அங்காடியாகும்.
- (ii) அல்லங்காடி என்பது இரவு நேரத்து அங்காடியாகும்.

**7. காஞ்சியில் பிறந்த சான்றோர்கள் யாவர்?** ⊗

**விடை.** தர்மபாலர், ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர் போன்ற சான்றோர்கள் காஞ்சியில் பிறந்து வாழ்ந்தவர்கள்.

**8. ஏரிகள் மாவட்டம் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**

**விடை.** (i) ஏரிகள் மாவட்டம் என அழைக்கப்படுவது செங்கல்பட்டு ஆகும்.
(ii) காஞ்சி நகரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஏரிகள் வெட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டது.
(iii) இந்த ஏரிகள் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டிருந்தன.

## VII. உயர் சிந்தனை வினாக்கள்.

**1. ஈராக் - குறிப்பு தருக.**

**விடை.** (i) பண்டைய மெசபடோமியாவின் ஒரு பகுதி தற்போது ஈராக் ஆகும்.
(ii) இது சுமேரிய நாகரிகத்தின் நகரம் எனப்படுகிறது.
(iii) இங்கு இரட்டையாறு எனப்படுகிற டைகிரீஸ், யூப்ரடீஸ் நதிகள் ஓடுகின்றன.
(iv) இது ஒரு வணிகப் பகுதியாகும்.
(v) இது பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. பூம்புகாரின் வணிகம் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக.**

**விடை.** (i) கடல் வழி வணிகம் மிக சிறப்பாக பூம்புகார் துறைமுகத்தில் நடைபெற்றது.
(ii) இதனை பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலிருந்து அறியலாம்.
(iii) பெரு வணிகர்களும்,பெருங்கடல் வணிகர்களும் நிறைந்த பகுதியாக பூம்புகார் விளங்கியது.
(iv) கிரேக்கம், ரோம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் இங்கு வந்துள்ளனர்.
(v) தொடர் வணிகத்தின் காரணமாக வெளிநாட்டு வணிகர்களில் பலர் பூம்புகாரிலேயே வசித்தனர்.
(vi) இங்கு வணிகம் நேர்மையாகவும், நாணயமாகவும் நடைபெற்றது.
(vii) சந்தனம், முத்து, பவளம், கருமிளகு, தங்கம் மற்றும் குதிரைகள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன.

**3. காஞ்சியில் பிறந்த சான்றோர்களின் பெயர்களைக் கூறு.**

**விடை.** தர்மபாலர், ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர் போன்ற சான்றோர்கள் காஞ்சியில் பிறந்து வாழ்ந்தவர்கள்.

**4. கோயில்களின் நகரம் - குறிப்பு தருக.** ⊗

**விடை.** (i) காஞ்சி கோயில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
(ii) இங்கு உள்ள கைலாசநாதர் கோவில் புகழ்பெற்றது. பிற்காலப் பல்லவ மன்னன் இராஜசிம்மன் இந்த கற்கோவிலைக் கட்டினார்.
(iii) பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோவில்களும் கட்டப்பட்டன.

**5. காஞ்சிபுரம் கல்வியில் தலை சிறந்து விளங்கியதென்பதை நிரூபி.**

**விடை.** (i) காஞ்சி நகரில் தான் முதன்முதலில் ஏராளமாக பள்ளிகள் அமைக்கப்பட்டன.
(ii) சமணர் அமைத்த பள்ளிகளில் சமண மாணவர்களும், புத்த விகாரங்களில் புத்த மாணவர்களும் பயின்றனர்.
(iii) நாளந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் கூடுதல் படிப்புக்காக காஞ்சியில் இருந்த கடிகைக்கு வந்திருக்கிறார்.
(iv) "நகரங்களில் சிறந்தது காஞ்சி" என்று கவிஞர் காளிதாசர் கூறுகிறார்.
(v) "கல்வியில் கரையிலாத காஞ்சி" என்று நாயன்மார்களுள் முதன்மையானவரான திருநாவுக்கரசர் காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளார்.

## VIII. மாணவர் செயல்பாடுகள்.

**1. கீழடி அகழாய்வுகள் குறித்த படத்தொகுப்பு ஒன்றைத் தயாரிக்கவும்.**

**விடை.** (i) கீழடி தொல்லியல் களம் என்பது இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும்.
(ii) இந்த அகழாய்வு மையம் தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12 கி.மீ தொலைவில், சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது.

www.surabooks.com




**(iii)** வைகையாறு தோன்றும் தேனி மாவட்டம் தொடங்கி கடலில் கலக்கும் இராமநாதபுரம் மாவட்டம் வரை வைகை ஆற்றங்கரையின் அருகாமை பகுதிகளில் 2013-14இல் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது தொல்லியல் எச்சங்கள் உள்ள 293 பகுதிகள் கண்டறியப்பட்டன.

**(iv)** இவை களஞ்சியங்கள், வணிகத் தலங்கள், துறைமுகங்கள், வாழிடங்கள், கோயில்கள் என்ற வகையிலானவை.

**(v)** கிட்டத்தட்ட 48 சதுரக் குழிகள் வெட்டப்பட்டு உறைகிணறுகள், செங்கற் சுவர்கள், கூரை ஓடுகள், மண்பாண்டங்கள், மிளிர்கல் அணிகலன்கள், எலும்புக் கருவிகள், இரும்பு வேல், தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானையோடுகள் எனப் பல்வேறு தொல்லெச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**(vi)** இலக்கியத்தில் குறிப்பிடப்படும் பாண்டியர்களின் தொல்நகரான "பெருமணலூர்" இதுவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.




**2. பண்டைய தமிழகத்தின் வணிகச் சிறப்புமிக்க நகரம் பூம்புகார். கலந்துரையாடு.**

**விடை. (i)** சங்க காலச் சோழ அரசின் துறைமுகம் பூம்புகார். பூம்புகார் துறைமுகத்தில் சீரும், சிறப்புமாக நடந்த வணிகம் குறித்து சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையிலிருந்தும், இரட்டைக் காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். இவற்றில் குறிப்பாக, சிலப்பதிகாரம் பூம்புகாரின் சிறப்பைப் பேசுகின்றது. சிலப்பதிகார நாயகி கண்ணகியின் தந்தை மாநாய்கன். மாநாய்கன் என்றால் பெருங்கடல் வணிகன் என்று பொருள். நாயகன் கோவலனின் தந்தை மாசாத்துவன். மாசாத்துவன் என்றால் பெருவணிகன் என்று பொருள். இதிலிருந்து பெருவணிகர்களும் பெருங்கடல் வணிகர்களும் நிறைந்த பகுதியாக பூம்புகார் விளங்கியது தெளிவாகிறது. இங்கு வணிகம் செய்ய கிரேக்கம், ரோம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்த வண்ணம் இருந்துள்ளனர். தொடர் வணிகத்தின் காரணமாக இவர்களில் பலர் பூம்புகார் நகரிலேயே வசித்திருக்கின்றனர். ஆகவே, இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகளும் தோன்றின. எனவே இங்கு பல்வேறு மொழிகளும் பேசப்பட்டன. கப்பலில் இருந்து சரக்குகளை இறக்கி வைக்கவும், ஏற்றவும் சில மாதங்கள் ஆகும் என்பதால் அயல்நாட்டு வணிகர்கள் இங்குள்ள மக்களுடன் உரையாடவும், உறவாடவும் வாய்ப்புகள் உருவாயின. பூம்புகார் மக்கள் வெளிநாட்டவர் மொழிகளைக் கற்றறிந்தனர். அயல்நாட்டவரும் தமிழ் மொழியைக் கற்றனர். இதனால் பண்டமாற்றங்களோடு கூடவே மொழி மாற்றமும் ஏற்பட்டது. இதன் விளைவாகச் சிந்தனைப் பரிமாற்றமும் பண்பாட்டுப் கலப்பும் நிகழ்ந்தன.

**(ii)** பூம்புகார் நகரத்து வணிகர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள். மிகச் சரியான விலைக்கே பொருள்களை விற்றனர். கூடுதலான விலைக்கு பொருளை விற்பது தவறான செயல் என்று அவர்கள் கருதினர் என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

www.surabooks.com

**(iii)** கடல் வழியாகக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கருமிளகு தரைவழித் தடங்கள் வழியே இறக்குமதி ஆனது. வட மலையிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது.

**(iv)** மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சந்தனமும், தென்கடல் பகுதியிலிருந்து முத்தும், கிழக்குப் பகுதியிலிருந்து பவளமும், ஈழத்திலிருந்து உணவுப்பொருள்களும் இறக்குமதியாகின.

**3. பல்லவர்காலக் கோயில்களின் புகைப்படங்களைச் சேகரி.**

**விடை. பல்வர்கள் காலக் கோயில்கள் :**

| | | |
|---|---|---|
| **(i)** | காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில். பிற்கால பல்லவ மன்னன் ராஜசிம்மன் இந்த கற்கோவிலைக் கட்டினார். |  |
| **(ii)** | மாமல்லபுரம் இரதக் கோயில்கள். |  |
| **(iii)** | மாமல்லபுரம் கடற்கரைக் கோயில். |  |
| **(iv)** | வைகுண்ட பெருமாள் கோயில், பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் இக்கோவிலைக் கட்டினார். |  |

**4. தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற ஏரிகள் பற்றி ஒரு சிறு நூலினைத் தயாரிக்கவும்.**

**குறிப்பு :**

**(i)** செம்பரம்பாக்கம் ஏரி, காஞ்சிபுரம் மாவட்டம்
**(ii)** கலிவேளி ஏரி, விழுப்புரம் மாவட்டம்
**(iii)** கொலவை ஏரி, காஞ்சிபுரம் மாவட்டம்
**(iv)** பழவேற்காடு ஏரி, கொரமண்டல் கடற்கரை
**(v)** சோழவரம் ஏரி, திருவள்ளூர் மாவட்டம்
**(vi)** வீராணம் ஏரி, கடலூர் மாவட்டம்

**5. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நகரங்கள் குறித்து ஒரு சிறு நூலைத் தயாரிக்கவும்.**

**குறிப்பு :**

**(i)** சென்னை
**(ii)** கோயமுத்தூர்
**(iii)** திருச்சிராப்பள்ளி
**(iv)** திருப்பூர்
**(v)** சேலம்
**(vi)** ஈரோடு
**(vii)** திருநெல்வேலி
**(viii)** கும்பகோணம்

**6. நூலகத்திற்குச் சென்று, உன் மாவட்டத்தில் உள்ள முக்கியமான இடங்களைக் கண்டுபிடி.**

**விடை.** மாணவர்கள் தாங்களாகவே செய்து கொள்ள வேண்டும்.


## IX. கட்டக வினாக்கள்.

| | | |
|---|---|---|
| எந்த நதிக்கரையில் பூம்புகார் அமைந்திருந்தது?<br>விடை : காவிரி | தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தொன்மையான நகரம் எது?<br>விடை : மதுரை | சங்க இலக்கியங்களில் ஏதேனும் ஒன்று கூறு.<br>விடை : தொல்காப்பியம் |
| பாண்டிய நாட்டைப் பற்றி குறிப்புகள் கூறிய கிரேக்க வரலாற்றாசிரியர் யார்?<br>விடை : மெகஸ்தனிஸ் | தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்கள் சங்க காலத்தில் எந்த ஆட்சியின்கீழ் இருந்தன?<br>விடை : பாண்டியர் | நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் தங்கிப் படித்த சீன வரலாற்றாசிரியர் யார்?<br>விடை : யுவான் சுவாங் |
| திருநாவுக்கரசர் காஞ்சியை ............... என்று குறிப்பிடுகிறார்.<br>விடை : கல்வியில் கரையிலாத காஞ்சி | சங்க காலத்தில் இருந்த இரவு நேர கடைகளின் பெயர் என்ன?<br>விடை : அல்லங்காடி | பல்லவ மன்னன் இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கோயிலின் பெயர் என்ன?<br>விடை : கைலாசநாதர் கோவில் |
| ஏரிகள் மாவட்டம் என்று அழைக்கப்படுவது எது?<br>விடை : செங்கல்பட்டு | வணிகம் என்றால் என்ன?<br>விடை :<br>பொருள்கள் வாங்குவதும், விற்பதும் வணிகம் எனப்படும். | வங்காள விரிகுடா கடற்கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகத்தின் பெயரைக் கூறு.<br>விடை : சென்னை |

## XI. வரைபடம்

**தென்னிந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிப்பிடுக.**

1. சென்னை 2. மதுரை 3. காஞ்சிபுரம் 4. பூம்புகார்
5. அரபிக்கடல் 6. வங்காள விரிகுடா 7. இந்தியப் பெருங்கடல்



www.surabooks.com



## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**1. உலகின் மிகத் தொன்மையான நாகரிகம், .................. நாகரிகம் ஆகும்.**

அ) சீன ஆ) எகிப்து
இ) சிந்துவெளி ஈ) மெசபடோமியா **[விடை : ஈ) மெசபடோமியா]**

**2. ரோமானிய நாணயங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ................ இல் இருந்தது.**

அ) பூம்புகார் ஆ) காஞ்சி
இ) மதுரை ஈ) திருவள்ளூர் **[விடை : இ) மதுரை]**

**3. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து .................... இறக்குமதியாயிற்று.**

அ) முத்து ஆ) சந்தனம்
இ) பவளம் ஈ) கருமிளகு **[விடை : ஆ) சந்தனம்]**

**4. கடியலூர் உருத்திரங்கண்ணனார் எழுதிய நூல் .................... .**

அ) சீவக சிந்தாமணி ஆ) எட்டுத்தொகை
இ) பட்டினப்பாலை ஈ) மணிமேகலை **[விடை : இ) பட்டினப்பாலை]**

**5. சங்கம் வளர்த்த நகரம் ............... .**

அ) காஞ்சி ஆ) மதுரை
இ) தஞ்சை ஈ) திருச்சி **[விடை : ஆ) மதுரை]**

**II. கூற்றுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : பௌத்த துறவியான மணிமேகலை தன் இறுதி காலத்தை காஞ்சியில் கழித்தார்.**
**காரணம் : காஞ்சி நகரில் புத்த விகாரங்கள் பல இருந்தன.**

அ) கூற்று சரி; காரணம் தவறு. ஆ) கூற்று சரி; கூற்றுக்கான காரணமும் சரி.
இ) கூற்று தவறு; காரணம் சரி. ஈ) கூற்று தவறு; காரணம் தவறு.

**[விடை : ஆ) கூற்று சரி; கூற்றுக்கான காரணமும் சரி]**

**2. அ) பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை உவரியிலிருந்து இறக்குமதி செய்தார்.**
**ஆ) சோழர் துறைமுகமான கொற்கைக்கு அருகில் உவரி உள்ளது**
**இ) ஈழத்திலிருந்து முத்து இறக்குமதியாயிற்று.**
**மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது / எவை?**

அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி
இ) இ மட்டும் சரி ஈ) அ மற்றும் இ மட்டும் சரி

**[விடை : அ) அ மட்டும் சரி]**

**3. சரியான தொடரைக் கண்டறிக.**

அ) பூம்புகார் அரபிக்கடலில் கரையில் அமைந்துள்ளது.
ஆ) பட்டினப்பாலை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர்.
இ) கண்ணகியின் தந்தை மாசாத்துவன்.
ஈ) சோழ அரசின் துறைமுகம் கொற்கை.

**[விடை : ஆ) பட்டினப்பாலை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர்]**

**4. தவறான தொடரைக் கண்டறிக.**

அ) காஞ்சி நகரம் நீர் மேலாண்மைக்கு சிறந்த சான்று ஆகும்.
ஆ) தொண்டை நாட்டின் ஒரு பகுதி தருமபுரி.
இ) கடைச்சங்க காலத்தில் தமிழ்ப்பணி செய்த புலவர்கள் 29 பேர்.
ஈ) இரவிலும் பொருள்களை பெண்கள் வாங்கிச் செல்லும் அளவிற்கு பாதுகாப்பானதாக மதுரை இருந்தது. **[விடை : இ) கடைச்சங்க காலத்தில் தமிழ்ப்பணி செய்த புலவர்கள் 29 பேர்]**